மலர்-4 இதழ்-91 ஜுன் 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



## தேவகியின் துயரத்துக்கு முன்ஜென்ம வினையே காரணம்?

ஆன்மிகமலர் mobile app
GET IT ON Google Play

இலவச e- book

## அகச் சடங்கு இல்லாத புறச்சடங்கு பயன் தராது?

# ஆன்மிக மலர்கள்



- கடலுக்கு 3500 அடி உயரத்தில் வெள்ளியங்கிரி மலையில் சிவனின் பஞ்சவாத்ய ஒலி கேட்கிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அருகே கோட்டையூரில் நூற்றி ஒன்று சாமிமலை குகையில் ஓரடி உயரம் கொண்ட கல்லால் ஆன அகல் விளக்கில் இளநீர் விட்டு தீபமேற்றினால் பிரகாசமாக எரியும் அதிசயம் நடக்கிறது.
- சேலம் தாரமங்கலம் பெருமாள் கோவிலில் ஸ்ரீராமர் சிற்பம் இருக்கும் இடத்திலிருந்து வாலி சிற்பம் இருப்பதை பார்க்க முடியும். ஆனால் வாலி சிற்பம் இருக்கும் இடத்திலிருந்து ஸ்ரீராமரைப் பார்க்க முடியாத வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.
- தஞ்சைபிரகதீஸ்வரர் கோவிலில் 72 டன் கல் கோபுர உச்சியில் வைக்கப்பட்டுள்ளது. கருவறை குளிர்காலத்தில் வெப்பமாகவும் வெயில் காலத்தில் குளிராகவும் இருக்கிறது.
- தாராபுரம் ஐராவதீஸ்வரர் கோவிலில் உள்ள இசைப்படிகளில் தட்டினால் சரிகமபதநிச என்ற இசை வருகிறது.

## தீக்ஷை விளக்கம்

தீக்ஷை என்பது ஆன்மிகத்தில் தற்போது வேக மாகப் பரவி வரும் ஒரு சொல்லாகும்.

குருவின் மூலம் சீடனுக்கு ஆன்மிக வழியில் செல்லும் முறையை குறிக்கும்.

தீக்ஷை என்பதின் முழு விளக்கம்

தீட்சை என்னும் வடமொழி சொல்லின் திரிபு தீக்கை என்பது ஆகும்.

தீ– கெடுத்தல்     க்ஷை–கொடுத்தல்

பாசப்பற்றைக் கெடுத்து மோட்சத்தை கொடுப் பது தீட்சை எனப்படும்.

இந்த தீக்ஷையை மூன்று வகையாகப் பிரிக் கின்றனர்.

1. சமயம் 2. விசேடம் 3. நிருவாணம்

## சிவ வழிபாடு

பொதுவாக சிவ வழிபாட்டை மூன்று வகையாக முன்னோர்கள் பிரித்து வைத்துள்ளனர்.

1. குரு வழிபாடு, 2. லிங்கவழபாடு,

3. சங்கம வழிபாடு.

குரு வழிபாடு: நம்மிடம் உள்ள அறியாமையைப் போக்கும் ஞான ஆசிரியரையே சிவமாகவே கருதி வழிபடுவதாகும்.



லிங்க வழிபாடு: திருக் கோயிலுக்குச் சென்று சிவபெருமானை லிங்க திரு மேனியில் வழிபடுதல்.

சங்கம வழிபாடு: சிவனடி யார்களை சிவமாகவே கருதி வழிபடுவது.

## செவ்வாய் தோஷம் விலக



செவ்வாய்தோஷம் பாதிப்பு உடையவர்கள் மண்கலயத்தில் கும்பம் வைத்து தேங்காய்க்கு பதிலாக வாழை பூவை வைத்து மல்லிகை பூவை கொண்டு 1008 உரு 'ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம்" என்று செவ்வாய்கிழமை செவ்வாய் ஓரையில் வணங்கிவந்து (7–வாரம்) கடல் மற்றும் ஆற்று தண்ணீரில் வாழை பூவை விட்டு விட உடனே செவ்வாய்தோஷம் விலகும்.





## குழந்தை பிறப்பு குறித்த சிற்பங்கள்



திருப்பூரில் உள்ள குண்டடம் வடுக நாத பைரவர் கோவிலில் குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் பொழுது, குழந்தை இந்த மாதத்தில் இந்தந்த வடிவத்தில் இந்த விதமான Positions இருக்கும் என்பதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்லில் சிற்பங்களாக வடித்து வைத்துள்ளார்கள் நம் முன்னோர்கள்.

## சிவாயநம விளக்கம்



"சிவயநம" என்பதை திருவைந்தெழுத்து என்று சிவனடியாகர்கள் கூறுவார்கள்.

இந்த திருவைந்தெழுத்தின் விளக்கத்தைப் பார்ப்போம்.

சிவாயநம என்னும் மந்திரமாகும்.

சி ................ சிவன்
வ ................ சக்தி (அருள்)
ய................. உயிர்
ந ................ மறைப் பாற்றல்
ம................. ஆணவ மலம்

என்று ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறித்து நிற்கிறது.

திருவைந்தெழுத்து மூவகைப்படும். நமசிவாய, சிவாய நம, சிவயசிவ என்பவை. இம்மந்திரமே பஞ்சாட்சர மந்திரம் என்று கூறப்படும்.

## இறை நிலையில் கேவலம், சகலம், சுத்தம்




**கேவலம்:**

உயிர்கள் தம்மையும் அறியாமல், தமக்கு மேலே இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதையும் அறியாமல், தன்னை ஆணவம் என்ற மலம் முழுமையாக மறைத்திருக்கின்றது என்பதை அறியாத உயிரின் நிலை.

**சகலம்:**

கேவலநிலையில் இருந்த உயிர்களுக்கு மாயை மற்றும் கன்மத் தொடர்பினால் அறியாமை சிறிது குறைந்த நிலை.

**சுத்தம்:**

உயிர்கள், பாச நீக்கம் பெற்று இறைவனின் திருவடிகளை அடைந்து பேரானந்தத்தை அனுபவிக்கும் நிலை.

# சர்க்கரை நோய் தீர்க்கும் திருத்தலம்





திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை வெண்ணிக்கரும் பேஸ்வரர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தை வெண்ணி ஆலயம் என்றும் அழைப்பார்கள், நீடா மங்கலத்துக்கு மேற்கே 5 கிலோ மீட்டர் தூரத்திலும், தஞ்சாவூரில் இருந்து செல்லும் நெடுஞ் சாலையில் தஞ்சாவூருக்கு கிழக்கே 25 கிலோமீட்டர் தொலைவில் இத் தலம் உள்ளது.



இத்தலத்தில் பல்வேறு சிறப்புகள் உள்ளது. சர்க்கரை நோயாளிகளுக்கு தீர்வு தரும் தலமாகவும், சுகபிரசவத்திற்கு வழிவகுக்கும் தலமாகவும் விளங்குகிறது.

மிகவும் பழமை வாய்ந்த இத்தலத்து இறைவனை, நான்கு யுகங்களிலும் பலரும் வழிபட்டதாக தல வரலாறு கூறுகிறது.

பழங்காலத்தில் இந்தத் தலம் இருந்த இடம்கரும்புக்காடாக இருந்தது. ஒரு முறை இரு முனிவர்கள் தல யாத்திரையாக இங்கு வந்தனர்.

அப்போது கரும்பு காட்டிற்குள் இறைவனின் திருமேனி இருப்பதை கண்டு அதனை பூஜித்து வழிபட்டனர். அவர்களில் ஒருவர், இங்குள்ள தல விருட்சம் கரும்பு என்றும், மற்றொருவர் வெண்ணி என்றழைக்கப்படும் நந்தியாவட்டம் என்றும் வாதிட்டனர்.

அப்போது அங்கு வந்த மற்றொரு முனிவர் சிறிதும் யோசிக்காமல் வெண்ணி கரும்பேஸ்வரர் என்று அழைக்கலாம் என்றார்.

வெண்ணி என்பது வெண்ணிற மலர்கள் பூக்கும் நந்தியாவட்டம் செடியாகும். இதுதான் இத்திருக்கோவிலின் தல விருட்சமாகும்.

சிவனுக்குரிய அர்ச்சனை மலர்களில் நந்தியாவட்டம் மிக முக்கியமானது.

கிழக்கு நோக்கிய கருவறையில் மூலவர் வெண்ணிக் கரும்பேசுவரர் திருமேனி கரும்புக் கழிகளை ஒன்றுசேர்த்து வைத்தாற்போல் அருள் பாலிக்கிறார்.

அதே மண்டபத்தில் தெற்கு நோக்கிய சன்னிதியில் சௌந்தர நாயகி என்னும் அழகிய அம்மை நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.

இத்தல அம்பாளுக்கு வளையல் கட்டி பிரார்த்தனை செய்யும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

இத்தலத்தில் அம்மனுக்கு வளையல் சாத்தி பிரார்த்தனை செய்து கொள்ளுகின்றனர். கோயிலின் அருகாமையில் இருக்கும் ஊர் மக்கள் தங்கள் இல்லத்தில் திருமணமாகி கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு வளைகாப்பு முடிந்த கையோடு கொஞ்சம் வளையல்களை, அம்மனின் சன்னிதிக்கு எதிரே கட்டிவிட்டு, தனக்கு பிரசவம் எளிதாக இருக்க வேண்டிக் கொள்கின்றனர்.

இந்த பிரார்த்தனை நிறைவேறுவதால் அதிகப்படியான வளையல்களுடன் திருத்தலம் காட்சி தருகிறது.




www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com





திருஞானசம்பந்தரும், அப்பர் பெருமானும் ஒரு தலத்தைப் பற்றி பதிகம் பாடியுள்ளார்கள், இவர்கள் பிறப்பிற்கு முன்பே இத்தலம் மிகப் பழமையானதாக விளங்கியுள்ளது.

"சோதியை சுண்ணவெண்ணீறணிந்திட்ட எம்
ஆதியை ஆதியும் அந்தமும் இல்லாத
வேதியை வேதியர் தாந்தொழும் வெண்ணியில்
நீதியை நினையவல் லார்வினை நில்லவே"

என்று திருஞானசம்பந்தர் பதினொரு பதிகங் களும்,

"இலையினால் கொன்றை சூடிய ஈசனார்
மலையினால் அரக்கன் திறல் வாட்டினார்
சிலையினால் மதில் எய்தவன் வெண்ணெயைத்
தலையினால் தொழுவார் வினை தாவுமே"

என்று திருக்குறுந்தொகை பாடல்கள், திருத் தாண்டகம் என்று திருநாவுக்கரசர் பத்து பதிகங்களும், இவ்வாலய ஈசனைப் பற்றி பாடி யுள்ளார்கள்.

அப்பர் மற்றும் சம்பந்தர் ஆகியோரால் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் சோழ நாடு காவிரி தென்கரைத் தலங்களில் 102ஆவது சிவத் தலமாகும்.

இந்த ஆலயத்தில் சோழர்கால கல்வெட்டுக் களும், குறிப்பாக ராஜராஜன், குலோத்துங்க சோழன் கல்வெட்டுக்கள் உள்ளது. சர்க்கரை நோயுள்ளவர்கள் வெண்ணி கரும் பேசுவரர் ஆலயம் வந்து வெள்ளை சர்க்கரை யையும் ரவையையும் கலந்து தூவிவிட்டு வருகி றார்கள்.

எறும்பானது ரவையில் இருந்து சர்க்கரையை பிரித்து உண்ண உண்ண, வேண்டுதல் வைத்தவர் உடலில் சர்க்கரையின் அளவு குறைவதை கண்கூடாக உணர்கின்றனர்.

இவ்விதம் நோய் நீங்கப் பெற்ற பின் 18, 24, அல்லது 48 முறை கோவிலை வலம் வந்து வெண்ணி கரும்பேசுவரருக்கும், அழகியநாயகி அம்மைக்கும் அர்ச்சனை செய்கிறார்கள். சுக்ர தோஷம் உள்ளவர்களுக்கும் லிங்கோத்பவர் சன்னதியில் கிழக்கு நோக்கி தீபம் ஏற்றி சிறப்பு பரிகார பூஜைகள் செய்யப்படுகின்றது.

கரிகால சோழனால் வணங்கப்பட்ட "பிடாரி அம்மன்" இங்கு வீற்றுருக்கின்றாள். இந்த அம்பாளை சூடம் ஏற்றி எலும்பிச்சை மாலை அணிவித்து வணங்கி வருபவர்களின் எதிரிகள் ஒடுக்கபடுவதை கண்கூடாக பார்க்கின்றனர்.

பிடரி அம்மன் வெட்ட வெளியில் மரத்தின் அடியில் மேல் கூரை இல்லாமல் காட்சிதருவதால், இந்த அம்மனுக்கு மேல் கூரை அமைக்க பல முறை முயன்று பல தடங்கல்கள் ஏற்பட்டதால் முயற்சியை கிராம மக்கள் கைவிட்டு விட்டனர்.

வினைதீர்க்கும் வெண்ணித் தொன்னகர், வெண்ணியூர் என்று அழைக்கப்பட்ட ஊர், இன்று கோவில் வெண்ணி என்று மருவி விட்டது.

நோய்களை விரட்டும் சூரிய மற்றும் சந்திர புஷ்கரணி இத்தலத்தில் அமைய பெற்றுள்ளது.



# தடை தீர்க்கும் பொம்மை கல்யாணம்



குடும்பத்தில் திருமண நிகழ்வில் தொடர்ந்து தடை இருந்து வந்தால், அதை போக்க நம் முன்னோர் எளிமையான ஒரு வழியை கடைபிடித்தனர். அதற்கு பெயர் "பொம்மை கல்யாணம்" அத்துடன் இல்லாமல் கல்யாண விருந்து வைப்பார்கள்.

இப்படி செய்வதால் திருமண தோஷம் இருந் தால் அது நீங்கிவிடும் என்று நம் முன்னோர் இந்த வழகத்தை பயன்படுத்தினர்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், ஏதோ ஒரு சிறு பிரச்சனையால் ஸ்டார்ட் ஆகாத வாகனத்தை சற்று தள்ளிவிட்டால் அது தொடர்ந்து ஓடும்...

அதுபோலத்தான், வீட்டில் சிறுதடைபடும் விசேஷங்கள் தொடர்ந்து நடைபெற பொம்மை கல்யாணமும் உதவும்.

இந்த பொம்மை கல்யாணத் திற்கு மரப்பாச்சி பொம்மையை பயன்படுத்தினர்.

மரப்பாச்சி பொம்மைக்கு கல்யாணம் செய்து வைத்து தெரிந்தவர்களை அழைத்து சாப்பாடு போடுவார்கள், அன்னதானத்தைவிட சிறந்த தானம் இல்லை. ஆகையால் பொம்மைக்கல்யா ணம் மூலம் அன்னதானம் செய்வதன் பலன் உடனே கிடைத்துவிடும். அந்த வீட்டில் விரைவில் சுப நிகழ்ச் சியும் நடைபெறும்.

இந்த முறையை நமக்கு முந்தைய சந்ததியினர் கண்கூடாக பார்த்திருப் பார்கள்.

சரி திருமணம் ஆகிவிட்டது. பெண்ணுக்கு சீர் கொடுக்கும்போது அந்த மரப்பாச்சி பொம்மை களையும் சேர்த்தே கொடுப்பார்கள்.

அதற்கும் காரணம் இருந்தது.

அந்தப்பெண் அந்த பொம்மைகளையே தன் தாய் தந்தையாக நினைத்து அவர்கள் கூட இருப்பதாக உணர் வாள், காரணம் அந்தக் காலத்தில் போட்டோக்கள் கிடையாது.

சரி குழந்தை பிறந்துவிட்டது

அந்த குழந்தைக்கு ஜலதோஷம் பிடித்தால் மரப்பாச்சி பொம்மையை சந்தணக்கல்லில் வைத்து தேய்த்து அதை தாய்ப்பாலில் குழைத்து விளக்கில் சூடு காட்டி அதை நெற்றியில் பத்து போட்டால் ஜலதோஷம் நீங்கி குழந்தை அயர்ந்து தூங்கும்.

பெரியவர்களுக்கு கட்டி வந்தால் கூட இது போல் தேய்த்து கட்டி மேல் தடவுவார்கள்.

அதைப்போன்று குழந்தை வளர்ந்து பல்லால் கடிக்கும் நிலை வரும் போது, அக்குழந்தை விளையாட அந்த மரப்பாச்சி பொம்மையையே தருவார்கள், பல மருத்துவ குணங்கள் உள்ள மரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மையை குழந்தை கடிக்கும் போது அதன் மருத்துவகுணம் உள்ளே சென்று நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும்.

இதனால் குழந்தையை தொற்றும் சிறு சிறு நோய்களுக்கு இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்தி கிடைத்துவிடும்.



இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த மரப்பாச்சி பொம்மைகளை தற்போது நாம் மறந்தது நமது சந்ததியினருக்குத்தான் பெரிய இழப்பாகும்.

விவரம் தெரிந்தவர்கள் தங்கள் வாரிசுகளுக்கு விளையாட இந்த மரப்பாச்சி பொம்மையை பரிசளித்து அதன் மகத்துவத்தை அவர் களுக்கு எடுத்துரைத் தால் முன்னோர் மருத்துவம் இக்காலத்திலும் பயன் கிடைக்கும்.

# அர்ஜுனன் வில்லும் கண்ணனும்



சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள், தங்கள் அனைத்துச் செல்வங்களையும் துரியோதன னிடம் பறிகொடுத்தார்கள். அப்போது கர்ணனை அழைத்த துரியோதனன், "கர்ணா! இனி இவர்களின் அனைத்துச் சொத்துக்களும் நமக்கே சொந்தம். அக்னி பகவானின் பரிசாக அர்ஜுனன் பெற்ற காண்டீவ வில்லை இனி நீ எடுத்துக் கொள்!" என்றான்*.

ஆனால் கர்ணனோ காண்டீவத்தை வாங்க மறுத்துவிட்டான்.

"நான் எனது வலிமையிலும் திறமையிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். அவற்றைக் கொண்டு அர்ஜுனனை வெல்வேன். தேவர் களின் அருளால் கிட்டிய இந்த வில் எனக்குத் தேவையில்லை!" என்று சொன்னான் கர்ணன்.

"ஆஹா! நீ அல்லவோ சுத்த வீரன்! அர்ஜு னன் காண்டீவத்தை நம்புகிறான். நீ உன் திறமையை நம்புகிறாய் !" என்று கர்ணனைத் துரியோதனன் பாராட்டினான்.

அர்ஜுனன் வனவாச காலத்தில் இந்தச் சம்பவத்தை வியாசரிடம் சொல்லி மிகவும் வருந்தினான். இதைக் கேட்டுச் சிரித்த வியாசர், "கர்ணன் காண்டீவத்தை வாங்க மறுத்ததற்கு வேறு காரணம் உள்ளது! அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை!" என்றார்.

"அது என்ன?!" என்று கேட்டான் அர்ஜுனன்.

"நேரம் வரும் போது சொல்கிறேன் !" என்றார் வியாசர்.

பல ஆண்டுகள் கழிந்தன.

மகாபாரத யுத்தம் முடிந்து, தர்மபுத்திரர் முடிசூடிய பின், கண்ணனைச் சந்திக்க அர்ஜு னன் துவாரகைக்குச் சென்றான்.

அர்ஜுனா! நான் எனது அவதாரத்தை முடித்துக் கொண்டு வைகுண்டம் செல்லவுள் ளேன். அதனால் எனது அரண்மனை யிலுள்ள பெண் களை எல்லாம் நீ பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு இந்திரப்ரஸ்தத்துக்குச் சென்று விடு!" என்று கூறினான் கண்ணன்.

கனத்த மனத்துடன் கண்ணனி டமிருந்து விடைபெற்ற அர்ஜு னன், தனது தேரில் பெண் களை அழைத்துக் கொண்டு சென் றான். வழியில் சில கொள் ளையர்கள் தேரை நிறுத்தி அர்ஜுனனைத் தாக்கினார்கள்.

அவர்களைப் பதிலுக்குத் தாக்குவதற்காகக் காண்டீவத்தை எடுக்க முற்பட்டான் அர்ஜுனன். ஆனால் அவனால் காண்டீவத்தைத் தூக்கமுடிய வில்லை. பற்பல பேரரசர்களை வீழ்த்தியவ னும், யாராலும் வீழ்த்த முடியாதவன் என்று போற்றப்படுபவனும், வில் விஜயன் எனப் பெயர் பெற்றவனுமாகிய அர்ஜுனனை அந்தச் சாதா ரணத் திருடர்கள் வீழ்த்திவிட்டார்கள். தன் வாழ்வில் முதன் முறையாகத் தோல்வியைச் சந்தித்தான் அர்ஜுனன்.

அதுவும் வெறும் சாதாரணத் திருடர்களிடம் வெட்கத்தால் தலைகுனிந்த நிலையில், இந்திர ப்ரஸ்தத்துக்கு நடந்தான் அர்ஜுனன். அப்போது அவன் எதிரில் வந்தார் வேத வியாசர்.

"அர்ஜுனா! நீயும் உன் சகோ தரர்களும் பூமியில் இருந்து புறப்படு வதற்கான காலம் வந்து விட்டது. இப்போது நடந்த சம்பவம் அதை நினைவூட்டவே ஏற்பட்டது!" என்று கூறினார் வியாசர்.

"கண்ணனே புறப்பட்ட பின், நாங்கள் பூமியில் இருந்து என்ன செய்யப் போகிறோம். நாங்களும் புறப்படத் தயார். ஆனால், என் மனதில் பெரும் ஐயம் எழுந்துள்ளது.

இது வரை நான் காண்டீவத்தைப் பொம்மை போலக் கருதி அனாயாசமாகக் கையில் ஏந்தினேன். ஆனால் இப்போது அது மலை போல் கனமாக உள்ளது. என்னால் அதைத் தூக்க முடியவில்லையே ! என்ன காரணம்?" என்று கேட்டான் அர்ஜுனன்.

அதற்கு வியாசர், "உன்னால் இந்தக் காண்டீவத்தை நிச்சயமாகத் தூக்க முடியாது. கண்ணன் உன்னுடன் இருந்தவரை இந்தக் காண்டீவத்தை ஏந்துவதற்கான பலத்தை அவன் உனக்கு அளித்தான். அவனது அருளால் தான் நீ காண்டீவத்தைப் பொம்மை போலத் தாங்கினாய். இப்போது அவன் பூமியை விட்டுச் சென்று விட்டதால், இதை உன்னால் தூக்க முடியவில்லை !" என்றார்.

மேலும், "சூதாட் டத்தில் நீ காண்டீவத்தை இழந்த போது, அதைக் கர்ணன் வாங்க மறுத்தானே, ஏன் தெரியுமா? கண்ணனின் அருள் பெற்ற நீ காண்டீவத்தைத் தூக்கிவிட்டாய்.

ஆனால் கண்ணனின் அருள் பெறாத கர்ணனால் இந்தக் காண்டீவத்தை அசைக்கக் கூட இயலாது. இது கர்ணனுக்கும் நன்றாகத் தெரியும்.

அந்தக் காரணத்தை வெளியே சொல்ல விரும்பாத கர்ணன், கௌரவமாகத் தான் சுத்த வீரன் என்றும் இந்த வில்லை நம்பித் தான் இல்லை என்றும் கூறிச் சமாளித்து, காண்டீவம் தனக்கு வேண்டாம் என்று கூறினான்!" என்றார் வியாசர்.

இதிலிருந்து பலசாலிகள் என்று போற்றப் படுபவர்களுக்கும் கூட, அந்த பலத்தைத் திருமால் தான் வழங்குகிறார் என்பதை நாம் உணர முடிகிறது.

**இக்கருத்தை "ஸத்வம் ஸத்வவதாம் அஹம்" என்று கீதையில் கண்ணன் குறிப்பிடுகிறார். இதற்கு பொருள் "பலசாலிகளின் பலமாக நானே இருக்கிறேன்" எவ்வளவு உண்மையான வார்த்தைகள்.**


www.aanmeegamalar.com



# நான்கிற்குள் அனைத்து வழிபாட்டு முறை

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

இந்து மதத்தில் பல்வேறு வழிபாடு இருந்தாலும் அவை அனைத்தும் நான்கிற்குள் அடங்கிவிடுவதாக கூறப்படுகிறது.

சரியை, கிரியை, யோகம், ஞானம்

இந்த நான்கிற்குள் அனைத்து வழிபாட்டு முறைகளும் அடங்கிவிடுகிறது.

அந்த நான்கைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

**சரியை:** உடலால் வழிபடுவது.

**கிரியை:** உடலாலும், உள்ளத்தாலும் வழிபடுவது.

**யோகம்:** உள்ளத்தால் வழிபடுவது.

**ஞானம்:** எங்கும் எதிலும் இறையருளையே காண்பது.

# அகச் சடங்கு இல்லாத புறச்சடங்குகள் பயன் தராது?

சடங்குகள் பெரும்பாலும் புறச்சடங்கு மற்றும் அகச்சடங்கு என்று இரண்டு நிலைகளைக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு வகைச் சடங்குகளையும் ஏற்றால்தான் ஒருவன் பூரண நிலையை அடைய முடியும்.

அகச் சடங்கை விட்டுவிட்டு புறச் சடங்குகளை மட்டும் ஒருவன் தீவிரமாக செய்தாலும் எந்த வித பயன்களும் ஏற்படாது என்று முன்னோர்கள் பல்வேறு இதிகாச புராணங்கள் வாயிலாகவும் கூறியுள்ளனர்.

புறச்சடங்கு என்பது, மனிதன் வெளியுலகத்துடன் தொடர்பு கொண்டு செய்யப்படுவதாகும், பூஜை செய்தல், வேதம் ஓதுதல், மந்திரம் ஜெபித்தல், இறைவனை வணங்குதல் போன்றவை புறச்சடங்குகளில் அடங்கும்.

## அக சடங்குகள் எட்டு:

எல்லா உயிர்களிடமும் கருணை, பொறுமை, பொறாமை இல்லாமை, தூய்மை, தெளிவு, நேர்மறையான எண்ணங்கள் கொண்டிருத்தல், தாராளகுணம், பேராசை இல்லாமை.

## பயன்தராது:

“எவனொருவன் புற சடங்குகளை மட் டுமே மேற்கொண்டு, அக சடங்குகளையும் மேற்கொள்ளாமல் இருக்கிறானோ அவன் இறைவனோடு ஒன்றாகக் கலப்பதில்லை.

அவன் செய்யும் புற சடங்குகள் அர்த்தமற்று போகின்றன. ஒருசில புற சடங்குகள் மட்டுமே மேற்கொண்டிருந்தாலும் எட்டு அக சடங்குகளையும் மேற்கொண்டிருப் ப வ ன் நிச்சயமாக இறைவனோடு சேர்கிறான் என்று புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது.









ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# வஜ்ராயுதம் தோன்றிய வரலாறு

அதர்வண வேதத்தை தந்தவர் அதர்வண மகரிஷி ஆவார். இந்த மகரிஷியின் மகன்தான் ததீசி முனிவர், இவர் வேத கால மகாரிசிகளுள் ஒருவர்.

ததீசி முனிவர் மிகச்சிறந்த சிவபக்தர். இவர் மனைவியுடன் பல்லாண்டு காலம் நைமிசாரண் யத்தில் இன்றைய லக்னோ உத்திரபிரதேசம் அருகே பல காலம் தவம் புரிந்து சிவனைப் பூஜித்து வந்தார்.

ஒருநாள் க்ஷுவது என்ற மன்னனுடன் கருத்து வேறுபாடு காரணமாக இவர் போர் புரியும் சூழல் ஏற்பட்டது. போரில் இவர் க்ஷுவது மன்னனின் பின்னந்தலையை தாக்க அவன் மூர்ச்சித்து வீழ்ந்தான்.

பின்னர் மயக்கம் தெளிந்து எழுந்து முன்பை விட உக்கிரத்துடன் போரிட்டான். ததீசியின் உடலை க்ஷுவது மன்னன் பிளந்தான்.

ததீசி முனிவர் சுக்கிராச்சாரியாரின் உதவியை நாட அவர், இவரது காயங்களை தனது யோக சக்தியினால் குணப்படுத்தினார், உடலை சீர்படுத்தினார்.



பின்னர் இவருக்கு மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்தார். இருப்பினும் செய்த தவறுக்காக சிவபெருமானை நோக்கி தவமிருந்தார்.



இவரது தவத்தை கண்டு இரங்கிய சிவ பெருமான் இவருக்கு காட்சி தந்து

1. இவரது எலும்புகள் வஜ்ஜிரத்தை (மின்னல்) போல உறுதியுடையதாக ஆகட்டும்.
2. இவரை எவராலும் கொல்ல முடியாது
3. இவரை எவரும் துன்புறுத்தவும் முடி யாது.

என்ற வரங்களை வழங்கினார்.

இறைவனின் அனைத்து செயல்களுக்கும் காரணம் இல்லாமல் இருப்பதில்லை, நாட்கள் சென்று கொண்டிருந்தது.

பாற்கடலில் அமுதம் கடைவதற்காக தேவர் களும், அசுரர்களும் முடிவு செய்தனர்.

தேவர்களும் தங்களின் ஆயுதங்கள் தீய சக்திகளிடம் சிக்காமல் இருக்க என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த நாரதர் “தேவர்கள் தங்களின் ஆயுதங்களைப் ததீசி முனிவரிடம் கொடுத்து பாதுகாக்க சொல்வதே சிறந்தது” என்று கூறினார்.

தேவர்களும் தங்களின் ஆயுதங்களை ததீசி யிடம் கொடுத்து “நாங்கள் திரும்பி வந்து கேட்கும் வரை ஆயுதங்களை பாதுகாக்க வைத்திருங்கள்” என்று கூறினர்.

முனிவரும் அதற்கு சம்மதம் தெரிவித்து ஆயுதங்களை தன்வசம் வைத்துக் கொண்டார்.

பாற்கடலை கடைந்த பின்பு வந்த அமிர்தத்தை தேவர்கள் பருகி சீரஞ்சீவி ஆயினர். தங்களின் ஆயுதங்கள் குறித்து மறந்து போயினர்.

ததீசி முனிவரும் தேவர்களிடம் அவர்களின் ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தார். நாட்கள் நகர்ந்தன. தேவர்கள் திரும்பி வரவில்லை.

ததீசி முனிவரும் தேவர்களின் ஆயுதங்களை பாதுகாக்க முடியாமல் தனது தவ வலிமையால் அவற்றை திரவமாக்கி குடித்து விட்டார். தேவ ஆயுதங்களின் சக்தி முழுவதும் முனிவரின் முதுகெலும்பில் போய் சேர்ந்தது.

இந்நிலையில் விருத்தாசுரன் என்ற அசுரன் பிரம்மாவை நோக்கி தவம் இருந்தான். அவனு டைய தவத்தினைப் பாராட்டி பிரம்மதேவர் அவர் முன் தோன்றினார்.

அவரிடம் இருந்து அசுரன் “எனக்கு உலகின் உலோகம் மற்றும் மரத்தால் ஆன ஆயுதத்தாலோ,


ஆன்மிகமலர் மெயில் புக்

பஞ்சபூதத்தாலும், எந்த உயிரிகளாலும் ஆபத்து ஏற்படக் கூடாது" என்ற வரம் வேண்டும் என்று கேட்டான்.

பிரம்மாவும் அவன் கேட்ட வரத்தை அருளினார். பிரம்மாவின் இந்த வரத்தால் மிகவும் கர்வம் கொண்ட விருத்ராசுரன் அனைவரையும் கொடுமைப் படுத்த ஆரம்பித்தான்.

யாராலும் அவனை வெல்ல இயலவில்லை. ரிஷிகள் தேவர்களும் கூட அவனை வெல்ல முடியாமல் திகைத்தனர்.

எந்த ஆயுதம் கொண்டு அவனைத் தாக்கினாலும் மரணம் கிடையாது என்ற சாகாவரம் பெற்ற காரணத்தால் அவனை வீழ்த்த இயலவில்லை. தேவர்கள் அனைவரும்சிவ பெருமானிடம் சென்று முறையிட்டனர்.

உலக உயிர்களின் துன்பம் கண்டு சிவன் அவர்களுக்கு அனுக்ரகம் செய்ய எண்ணினார். "ததீசி முனிவர் மனமுவந்து தனது முதுகெலும் பை கொடுத்தால்அதை ஆயுதமாக்கி அந்த அசுரனை நீ வென்று விடலாம்" என்றார்.

நைமிசாரண்யம் அருகே ஒரு மலை மீது ஒரு காலில் நின்றபடியே தவம் செய்யும் ததீசி மகரிஷியை கண்டான்.

நேரே அவர் முன் சென்று நின்று கைதொழுதான். வெகு நேரம் கழித்துக் கண் திறந்த ரிஷி ததீசி இந்திரனை ஆச்சரியமாகப் பார்த்தார்.

தான் வந்த காரணத்தையும் சிவ பெருமான் கூறியதையும் கேட்டபோது, "ஓ... இதற்காகத் தான் அப்படியெல்லாம் நடந்ததா?" என்று உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். காரணமின்றி காரியங்கள் நடப்பதில்லை அல்லவா?

ததீசி முற்றும் துறந்தவர். இந்த உடல் மீது பற்றற்றவர். மேலும் உலக நன்மைக்காகவும் விருத்ராசுரன் அழிக்கப்படவும் தனது எலும்பு பயன்படுவதில் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

"தாரளமாக எடுத்துக்கொள் தேவேந்திரா! இது நான் செய்த பாக்கியம்!!" என்றார் புன்முறுவலுடன். ததீசி முனிவர் சம்மதித்து விட்டாலும் இவரது முதுகெலும்பை சேதமின்றி எப்படி எடுத்துக்கொள்வது என்று



தேவேந்திரனுக்கு புரியவில்லை.

அவனது தவிப்பை உணர்ந்த ததீசி மகரிஷி, "தேவந்திரா பசுமாடு ஒன்றை அழைத்து வா. என் உடல் முழுதும் உப்பை தடவு. நான் யோக நிஷ்டையில் ஆழ்ந்துவிடுகிறேன்.

பசுவை கொண்டு என் உடல் மீது உள்ள உப்பை நாவினால் அகற்றச் செய். சதை அப்படியே தனியே வந்துவிடும். பின்னர் நீ தேவையான எலும்பை சேதமின்றி எடுத்துக் கொள்ளலாம்" என்கிறார்.

அதன்படியே தேவேந்திரன் ஒரு பசுவைக் கொண்டு ததீசி முனிவரின் சருமத்தை நாவினால் நக்கச் செய்து எவ்வித சேதமும் இன்றி முதுகெலும்பை எடுத்துவிடுகிறான்.

பின்னர் அதை ஆயுதம் செய்ய தேவலோக சிற்பி விஸ்வகர்மாவிடம் கொடுக்கிறான்.

விஸ்வகர்மா அந்த எலும்பை செதுக்கி வஜ்ராயுதம் செய்கிறார்.

அவர் அதற்காக அந்த எலும்பை செதுக்கும்போது அதன் ஒரு சில துளிகள் பூமியில் சில இடங்களில் விழுகின்றன. அந்த துளிகளின் வீரியத்தால் அங்கு வைர சுரங்கங்கள் தோன்றுகின்றன.

பூமியில் வைர சுரங்கங்கள் தோன்றிய வரலாறு இது தான். வஜ்ராயுதத்தின் மற்ற துளிகள் பட்ட இடங்களில் நவரத்தினங்களில் மற்ற ரத்தினங்கள் தோன்றின.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற வஜ்ராயுதத்தை வைத்து விருத்ராசுரனை இந்திரன் வென்று விடுகிறான்.

வஜ்ராயுதம் இந்திரனின் வலிமை மிக்க ஆயுதமாகவும் விளங்கியது.

பலசாலிகளான கருட பகவானும், அனுமனும் வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்டனர். கருட பகவான் தனது ஒரு சிறகினை இழந்தும், அனுமன் மூர்ச்சை அடைந்தும் இவ்வாயுதத்தினைப் பெருமைப்படுத்தும் விதமாக நடந்து கொண்டனர்.

தற்போது இந்திய அரசின் உயரிய விருதான பரம் வீர் சக்ராவின் மேல் ததீசி முனிவரின் முதுகெலும்பு படம் வரையப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# தேவகியின் துயரத்துக்கு முன்ஜென்ம வினையே காரணம்?

மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீகிருஷ்ணரை, குழந்தையாகப் பெறும் பாக்கியம் செய்தவர்கள் வசுதேவர் தேவகி தம்பதி.

அப்படிப்பட்டவர்கள் சிறையில் கிடந்து தங்கள் குழந்தைகளின் மரணத்தைப் பார்த்து ஏன் கதறி அழ வேண்டும்? அதற்குக் காரணம் இருக்கிறது.

தட்சனின் பெண்களான திதி, அதிதி மகரிஷி காச்யபரின் மனைவியர்.

இளையவள் அதிதிக்குப் பிறந்தவன் இந்திரன். மகா பராக்கிரமசாலி. திதிக்கும் இயல்பாகவே குழந்தை பெறும் ஆசை ஏற்பட்டது.

அவள் காச்யபரிடம், ''இந்திரனைப்போல், சகல உலகங்களும் போற்றும் ஒரு குழந்தை எனக்குப் பிறக்க வேண்டும்!'' என்றாள்.

''அப்படியானால், தேவி விரதத்தை முறைப்படி கடைப்பிடி!''என்றார் காச்யபர். அதன்படி விரதம் மேற்கொண்ட திதி, கருவுற்றாள்.

இதனால் அதிதியின் நெஞ்சில் வஞ்சம் குடி கொண்டது. பொறாமை மிகுந்த அதிதி, தமக்கையின் கருவை அழிக்கத் தீர்மானித்தாள்.



எனவே, தன் மகன் இந்திரனிடம், ''பெரியம்மாவின் வயிற்றில் வளரும் குழந்தையால் உனது பதவிக்கு ஆபத்து ஏற்படும்.

சகல உலகமும் திதியின் குழந்தையைப் போற்றிப் புகழும்!'' என்று கூறினாள்.

தனது பதவி பறி போகுமோ என்ற பயம் இந்திரனுக்கு வந்ததால் பெரியம்மாவின் மீதுள்ள பாசம் அவனிடம் மறைந்தது.

எனவே, அந்த சிசுவைக் கர்ப்பத்திலேயே கொல்லத் தீர்மானித்து திதியை அணுகினான். திதி, சிறந்த தேவி பக்தை.

அதனால், நல்லவன் போல் நடித்து அவளுக்குப் பணிவிடை செய்து தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான் இந்திரன்.

ஒரு நாள் பூஜை செய்து கொண்டிருக்கும்போது அசதியின் காரணமாக திதிக்குத் தூக்கம் வந்தது. எனவே, வாயைத் திறந்தவாறு தூங்கினாள் அவள்.

அப்போது இந்திரன் மிகவும் சிறிய உருவம் கொண்டு அவள் வாயினுள் நுழைந்து கர்ப்பப் பையை அடைந்தான்.

உள்ளிருந்த சிசுவை துண்டுகளாக்கினான். அதன் பின் அங்கிருந்து வெளியேறியவன், தன் தாய் அதிதியிடம் நடந்ததைத் தெரிவித்தான்.

கண் விழித்த திதி, கர்ப்பம் கலைந்ததை உணர்ந்தாள். ஆசையாகச் சுமந்த சிசு அழிந்து விட்டதை தங்கையிடம் தெரிவிக்க விரைந்தாள்.

அங்கே அதிதி, தன் மகனது தீரச் செயலைப் பாராட்டி மகிழ்வது கண்டு அதிர்ந்தாள்.

சகோதரியும் அவள் மகனுமே தன் சிசுவுக்கு எமன்களானதை அறிந்து கதறி அழுதாள்.

எனவே, ஆத்திரம் தாங்காமல், ''நீ பெற்ற குழந்தைகளை, உன் கண் முன்பாக வரிசையாகக் கொல்வதைப் பார்க்கும் துர்பாக்கியசாலி ஆவாய். நீ சுமந்து பெற்ற மகனை வளர்க்க முடியாமல் தவிப்பாய். அப்படி நூறு மடங்கு புத்திர சோகம் உன்னைச் சேரட்டும்!'' என்று சாபமிட்டாள்.

உடனே அதிதி, காச்யபரின் கால்களில் விழுந்து எல்லாவற்றையும் மன்னிக்குமாறு வேண்டினாள். அவளை திதியிடம் அழைத்து வந்தார் காச்யபர்.

இருவரையும் ஒரு சேரப் பார்த்த திதி, 'காச்யபரும் இந்தக் கொடுஞ் செயலுக்கு உடந்தை!' என்று கருதி, ''என் தங்கைக்கு நான் இட்ட சாபம் உங்களையும் சேரும்!'' என்றாள்.

''அவசரப்பட்டு விட்டாயே திதி!'' என்று கலங்கிய காச்யபர், திதிக்கு ஆறுதல் கூறினார்.

திதி இட்ட சாபம்தான், பின்னாளில் அதிதி காச்யபர் தம்பதியை, தேவகி வசுதேவ ராகப் பிறக்க வைத்து துயரத்தில் துடிதுடிக்க வைத்தது.


அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்

Bhaanrajg Graphics

செல்: +91-8825844033





ஆன்மிகமலர் மெயில் புக்





www.aanmeegamalar.com

# கல்கி அவதாரம்

கிருஷ்ண அவதாரம் முடிந்து பகவான் வைகுண்டம் சென்றதும் கலி புருஷன் பூலோகத்திற்குள் நுழைந்து விட்டான். அவன் ஆட்சியினால் தர்மம் நசிந்து விடும் என அறிந்த தருமபுத்திரர் முதலிய பாண்டவர்களும் கிருஷ்ணனை தொடர்ந்து வைகுண்டம் போனார்கள்.

கலி பிறந்ததும் கலி தோஷத்தால் மக்கள் உடல் மெலியும். அவர்களுடைய பிராண சக்தி குறைந்து போகும். வர்ணாசிரமம் நிலை குலை யும். வேததர்ம மார்க்கங்கள் மறைந்து விடும்.

ஆளும் அரசர்கள் திருடர்கள் போல் ஆவார் கள். தர்மம் பாஷாண்டம் மயமாகும். ஆளப்படும் மாந்தர்களும் திருட்டு, பொய் மற்றும் வீணான அபவாதங்களுக்கு ஆட்படுவர். பந்துக்கள் மைத்துனன்மார்களாக நடந்து கொள்வர்.

வர்ணங்கள் எல்லாமே சூத்திர வண்ணமாக மாறும். பசுக்கள் ஆடுகள் போல மெலியும். முனிவர்களின் ஆசிரமங்கள் என்று சொல்லப் படுபவை கிருகஸ்தாஸ்ரமத்திற்குள் போய் விடும். தாவரங்களில் மரங்கள் வன்னி மரங்களைப் போலக் காணப்படும்.

செடிகள் அணுவெனச் சிதைந்து விடும். மேக ங்களில் மின்னல்கள் மிகும். தர்மானுஷ்டாணம் அற்றுப் போவதால் வீடுகள் சூன்யப் பிரதேசம் ஆகும். மக்கள் கழுதைகளின் தர்மங்களை உடையவர் என ஆவார்கள். இப்படிக் கலி முற்றிய நிலையில் பகவான் சத்துவ குணத்தால் மீண்டும் அவதாரம் செய்வார்.

சம்பளக் கிராமத்தில் முக்கியமானவரும், மகாத்மாவுமாகிய கல்கி என்ற பெயருடன் பகவான் அவதரிப்பார்.

அணிமாதி அஷ்டமா சித்தியுடன், சத்திய சங்கல்பம் முதலிய குணங்களுடன் லோகநாயகன், வேகமாகச் செல் லும் குதிரை மீது ஏறிக்கொ ண்டு கத்தியால் தீயோரை அடக்கு வார். ஒப்பற்ற வேகம் கொண்ட குதிரை மீது ஏறி விரைவில் உலகெங்கிலும் சஞ்சாரம் செய்து, அரச வேடம் தாங்கி மறைவில் வாழும் திருடர்களை கோடிக்கணக்கில் சம்ஹாரம் செய்வார்.

துஷ்டர்கள் அழிவர். அதன் பின்பு புண்ணிய வாசனை கலந்த காற்றினால் தீண்டப் பெறும் நாடு நகர மக்கள் உள்ளம் தெளிவு பெறும். அவர்களது உள்ளத்தில் சத்துவகுண சீலரான பகவான் வாசம் செய்வார்.

அவர்களுடைய சந்ததி நல்ல வகையில் நல்ல வர்களாக பன்மடங்கு பெருகும். தர்மத்திற்கு உறைவிடமான பகவான் விஷ்ணு கல்கி அவதாரம் எடுக்கும் பொழுது இந்த உலகம் பழைய கிருதயுகம் எப்படி இருந்ததோ அதன் படி மாறும்.

மக்களின் பிறப்பும், சாத்வீகமாகத் திகழும். சூரியன், சந்திரன், குரு ஆகிய மூவரும் பூச நட்சத்திரத்தில் ஒரே ராசியில் எப்பொழுது கூடுகிறார்களோ அதுவே மறுபடித் தோன்றக் கூடிய கிருதயுகம் எனப்படும்.

ஸ்ரீ ஹரியின் தசாவதாரக் கதைகளை ஏகாதசி, துவாதசி காலங்களில் படித்தாலோ, கேட்டாலோ நமக்கு அளவில்லாத மகிழ்ச்சியும், மங்க லமும் உண்டாகும் என ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

‘கல்கி’ அவதாரம் செய்து ஸ்ரீஹரி பூமிதேவியின் துக்கத்தைப் போக்குவார். விஷ்ணுவின் தசா வதாரங்களில் கடைசியானது கல்கி



யுகங்கள் நான்கு வகைப்படும். அவை கிருத யுகம், திரோதா யுகம், துவாபர யுகம், கலியுகம். இதில்

கிருத யுகம் 17,28,600 வருடங்களும், திரோதா யுகம் 92,96,000 வருடங்களும், துவா பர யுகம் 8,64,000 வருடங்களும், கலியுகம் 4,32,000 வருடங்களும் கொண்டது.

இந்த நான்கும் சேர்ந்தால் ஒரு சதுர் யுகம் ஆகும். கலியுக முடிவு பற்றி வள்ளல் பெருமான் ராமலிங்க சுவாமிகள் தரும் குறிப்பு: முதல் யுகத்திற்கு நாள் எட்டு, 2வது யுகத்திற்கு நாள் ஆறு. 3வது யுகத்திற்கு நாள் நான்கு. 4வது யுகத்திற்கு நாள் இரண்டு. ஆகக்கூடிய நாள் இருபதும் கற்பம் முடிக்கக் கூடிய நாள்கள் (அதாவது ஓர் ஆயிரம் சதுர் யுகம் என்பது ஒரு கல்பமாகும்.) 60x60x60=216000 நொடி=1 நாள்.

அதாவது, நாள் ஒன்றுக்கு நாழிகை 60. நாழி கை ஒன்றுக்கு வினாடி 60. வினாடி ஒன்றுக்கு நொடி 60. இப்படி நாளிரண்டிற்கு 4,32,000 நொடி. இந்த 4,32,000 நொடியும் வருஷமாக கலியுகத்திற்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் கலியுகம் தோன்றி 5000 வருடங்கள் தான் ஆகிறது.

## கல்கி அவதாரத்தின் சுருக்கம்

கலியின் ஆவேசத்தால் எல்லா இடங்களிலும் அதர்மம் தலைவிரித்தாடும். பூமிதேவி மிகவும் துக்கமடைவாள். பூமிதேவியின் துக்கத்தை அறிந்து, பிரம்மாதி தேவர்கள் ஸ்ரீமன் நாராயணனிடம் சென்று முறையிடுவர். சஜ்ஜனர்களின் ரட்சணைக்காக ‘கல்கி’ என்னும் பெயரில் அவதாரம் செய்து ஸ்ரீஹரி பூமிதேவியின் துக்கத்தைப் போக்குவார். விஷ்ணுவின் தசா வதாரங்களில் கடைசியானது கல்கி.

கலியுகம் மற்றும் க்ருதயுகத்தின் நடுவில் விஷ்ணுயஷஸ் மற்றும் சுமதி என்னும் தம்பதிகளுக்கு ‘கல்கி’ என்னும் பெயரில் அவதாரம் செய்வார். பரசுராமரிடமிருந்து அனைத்து கல் விகளையும் கற்று பெருமை அடைவார். இவ ரது பெருமையை மெச்சி ருத்ரதேவர் இவருக்கு வாள் மற்றும் குதிரையை அளிப்பார்.

பின்னர் சிங்களத்தீவின் ராஜனான ப்ருஹத்ர தனின் மகளான பத்மாவதியை திருமணம் செய்வார். பூமியின் அனைத்து பாகங்களிலும் வியாபித்திருக்கும் கலியை முற்றிலுமாக அழிப்பார். ஒரே நாளில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநிறுத்தும் கல்கியின் சக்தி நம் கற்பனைக்கு எட்டாதது.

கலியுகத்தின் கடைசி நாளில், கலியை அழித்து, க்ருதயுகத்தின் துவக்கத்தில் அனைத்து சஜ்ஜனர்களுக்கும் தர்மத்தின் வழியைக் காட்டும் அவதாரமே ‘கல்கி’.

## கல்கி அவதாரம் சொல்லும் செய்தி

அதர்மம் தலைவிரித்தாடும்போது, ஸ்ரீஹரி கல்கியாக அவதாரம் செய்து, தர்மத்தை நிலை

நாட்டுவார். இது பிரம்மாண்டத்தைப் (உலகத்தைப்) பற்றிய விஷயம். பிண்டாண்டத்தில் (நம் உடலில்) பிரம்மாண்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் மட்டுமே அவதாரங்களைப் பற்றி சிந்தித்ததன் பலன் கிடைக்கும்.

நம் மனதில் இருக்கும் அதர்ம, அநியாய, ஆதாரம் இல்லாத சிந்தனைகள் ஆகிய கெட்ட குணங்கள் கலியாக தலைதூக்கும்போது, ஸ்ரீஹரி அவற்றை அழிப்பதற்காக கல்கியாக வரவேண்டும். பூமிதேவியைப்போல் நம் புத்தியும் (அறிவு), பிம்பரூபியான ஸ்ரீமன் நாராயணனிடம் முறையிட வேண்டும்.

அப்போது, ஜீவாத்மா என்னும் குதிரையில் ஏறி, மெய்யறிவு (ஞானம்) என்னும் வாளை ஏந்தி மனதில் தலைதூக்கும் கலியை அழித்து, ஸ்ரீஹரி கல்கியாக காட்சி தருவார். இத்தகைய கல்கியின் அவதாரத்தை தினமும் நம் மனதில் நினைத்து அவனை வணங்கவேண்டும்.

## கல்கி அவதாரத்தின் சிறப்பு

கலியை அழிப்பதனால் கல்கி என்னும் பெயரை பெற்றார். கலியுகத்தில் உள்ள அனைத்து சஜ்ஜனர்களுக்கும் இந்த கல்கிரூபியான ஸ்ரீஹரியே ஆதரவு/ கதியாக இருக்கிறார். கலியுகத்தின் சஜ்ஜனர்களுக்கு கல்கி அவதாரம் கடைசியானது. க்ருதயுகத்தின் சஜ்ஜனர்களுக்கு இதுவே முதலாவதாகும்.

த்வாபர மற்றும் கலியுகத்தின் சந்தியில், ஸ்ரீகிருஷ்ணன் அவதரித்து அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலைநாட்டினார். கலியுகம் மற்றும் க்ருதயுகத்தின் சந்தியிலும் இதே ஸ்ரீஹரி, அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவார்.

அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலைநாட்டுபவரான கல்கி ரூபியான ஸ்ரீஹரியை நாம் எப்போதும் நினைக்கவேண்டும்.

நம் மனதில் தசாவதாரங்கள் நிலைத்திருக்க வேண்டும். முதலில், வேதங்களிலிருந்து ஞானத்தைப் பெற்று நம் மனதை நிறைக்க வேண்டும். அதற்காக மத்ஸ்யாவதாரம் ஆக வேண்டும். ஞானத்தின் எடையினால் மனம் அமிழ்கிறது. அதை மேலெடுக்க வேண்டுமெனில், கூர்மாவதாரம் ஆகவேண்டும். ஹிரண்யன் என்னும் கெட்ட சிந்தனையின் அழிப்பிற்காக வராகன் பிறக்கவேண்டும்.

பக்தி என்னும் பிரகலாதனை அருளுவதற்காக நரசிம்மர் அவதரிக்கவேண்டும். ஒவ்வொரு பொருளை சம்பாதிக்கும்போதும் உண்டாகும் கர்வத்தை அழிக்க, வாமனனின் சிறிய பாதங்கள் நம் மனதில் தோன்ற வேண்டும். பற்பல துர்குணங்கள் என்னும் க்ஷத்ரியர்களை அழிக்க கோடலி பிடித்த ராமன் ஓடி வர வேண்டும். பிறகு நம் மனதில் ராமன் மற்றும் கிருஷ்ணன் இருவரும் வந்து அமரவேண்டும். இவர்கள் நம் மனதில் இருப்பதற்கு பிரச்னை ஏற்பட்டால், புத்தன் மற்றும் கல்கி ரூபங்கள் நம்மை ரட்சிக்க வேண்டும்.

கலியுகம் பற்றிய வினாக்களும் விளக்கமும்

### கல்கி அவதாரம் எப்போது?

கலியுகத்தின் இறுதி காலத்தில்.

### ஸ்ரீஹரி எங்கு கல்கியாக அவதரிப்பார்?

ஷம்பளம் என்னும் கிராமத்தில், விஷ்ணுயஷஸ் என்னும் பிராமணரின் வீட்டில் ஸ்ரீஹரி ‘கலி’ என்னும் ரூபத்தில் அவதரிப்பார்.

### அவதாரத்தின் நோக்கம் என்ன?

கலியின் தாக்கத்தால் பூமியில் எல்லா இடங்களிலும் திருடர்களே நிறைந்திருப்பர். அவர்கள் அனைவரையும் கொல்வதே அவதாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

### அவர்களை கல்கி எப்படி அழிப்பார்?

குதிரையில் வாளை ஏந்தியவாறு, அனைத்து ஐஸ்வர்யங்களாலும் நிறைந்த கல்கியானவர், பூமியில் நிறைந்திருக்கும் திருடர்களை அழிப்பார்.

### எவ்வளவு நேரத்தில்?

வெறும் 12 மணி நேரத்தில், லட்சக்கணக்கான ஆண்டுகளாக இருந்த கழிவுகளை துடைத்தெறிந்து, அனைத்து துஷ்டர்களையும் கொன்றழிப்பார்.

### சஜ்ஜனர்களின் நிலைமை?

இரவு வேளையில் சஜ்ஜனர்கள் தூங்கிக்கொண்டிருக்கும்போது, தன் உடலிலிருந்து சந்தனத்தை உற்பத்தி செய்து, அந்த சந்தனத்தால் சஜ்ஜனர்களின் மனதில் இருக்கும் கெட்ட எண்ணங்களை துடைத்து அழிப்பார்.

### அனைத்து துஷ்டர்களும் அழிந்தபிறகு என்ன நடக்கும்?

அடுத்த நாள் க்ருதயுகம் துவங்கும்.

### கலியுகத்தின் முடிவில் பிரளயம் வருமா?

அல்ல. பிரளயம் வராது. பூமி அழியாது. கல்கி அனைத்து துஷ்டர்களையும் அழிப்பார். க்ருதயுகத்தின் துவக்கத்திற்கு உந்துசக்தியாக இருப்பார்.





ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளம் வாயிலாக மாதம் இரண்டுமுறை வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புக்
அனைத்து இதழ்களையும்
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்து பயன் பெறலாம்.
உங்கள் நலம் விரும்பிகளுக்கு
ஷேர் செய்து அவர்கள்
பயன்பெற உதவுங்கள்
மேலும் விபரங்களுக்கு
போன்: 08825844033



# ஸ்ரீநரசிம்மர்



❖ நரசிம்மரைத் தொடர்ந்து மனம் ஒன்றி வழிபட்டு வந்தால் எதிரி களை வெல்லும் பலம் கிடைக்கும். நரசிம்மரை உபாசனா தெய்வமாக ஏற்றுக் கொள்பவர்களுக்கு 8 திசைகளிலும் புகழ் கிடைக்கும்.

❖ நரசிம்ம அவதாரம் காரணமாகவே மறந்து போன வேதங் களும், பொருள் புரியாத மொழிகளும், விடுபட்ட யாகங்களும் சாதா ரண நிலை நீங்கி, உயர் நிலையைப் பெற்றன.

❖ நூற்றி எட்டு திவ்ய தேசங்களில் ``சிங்கவேள்குன்றம்'' என்ப தும் ஒன்று. இத்தலம் மீது பாடப்பட்டுள்ள பதிகங்கள், பாசுரங்கள், செய்திகள் அனைத்தும் நரசிம்ம அவதாரம் மட்டுமே இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

❖ நரசிம்ம அவதாரத்தின் முதல் குறிப்பு பரிபாடலில் காணப் படுகிறது.

❖ நரசிம்மருக்கு நரசிங்கம், சிங்கபிரான், அரிமுகத்து அச்சுதன், சீயம், நரம் கலந்த சிங்கம், அரி, ஆனரி ஆகிய பெயர்களும் உண்டு.

❖ திருமாலின் பத்து அவதாரங்களில் பரசு ராமன், பலராமன் இருவரும் கோபத்தின் வடிவமாக திகழ்பவர்கள். இதனால் அந்த இரு அவதாரங்களும் வைணவர்களால்அதிகம் வணங்கப்பட வில்லை. ஆனால் நரசிம்ம அவதாரம் உக்கிரமானதாக கருதப்பட்டாலும் பக்தர்கள் அவரை விரும்பி வணங்குகிறார்கள்.

❖ நரசிம்ம அவதாரம் பற்றி முதன் முதலில் முழு மையாக சொன்னவர் கம்பர்தான்.

❖ திருத்தக்கதேவர் தனது சீவக சிந்தா மணியில், ``இரணியன்பட்ட தெம்மிறை எய்தினான்" என்று நரசிம்ம அவதாரம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

❖ இரணியனின் ரத்தத்தை குடித்ததால் சீற்றம் பெற்ற நரசிம்மரின் ரத்தத் தை சிவன் சரபப்பறவையாகவந்து குடித்தார். இதன்பிறகே நரசிம்ம ரின் சீற்றம் தணிந்ததாக சொல்வார் கள். இந்த தகவல் அபிதான சிந்தா மணியில் கூறப் பட்டுள்ளது.

❖ சோளிங்கரின் உண்மையான பெயர் சோழசிங்கபுரம். நரசிம்மரின் பெரு மையை பெயரிலேயே கூறும் இந்த ஊர் பெயரை ஆங்கிலேயர்கள் சரியாக உச்சரிக்க இயலாமல், அது சோளிங்கர் என்றாகிப் போனது.

❖ சிங்க பெருமாள் கோவில், மட்டப்பள்ளி, யாதகிரிகட்டா, மங்கள கிரி ஆகிய தலங் களில் நரசிம்மர் சன்னதிகள் குகைக் கோவிலாக உள்ளன.

❖ கீழ் அகோபிலத்தில் நாம் கொடுக்கும் பாகை நைவேந்தியததில் பாதியை நரசிம்மர் ஏற்றுக் கொண்டு மீதியை அவர் வாய் வழியே வழிய விட்டு நமக்கு பிரசாதமாக தருவதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.

❖ சிவனை கடவுளாக ஏற்ற ஆதிசங்கரர், ஸ்ரீலட்சுமி நரசிம்மரைப் போற்றித் துதித்ததும் அவருக்கு உடனே நரசிம்மர் காட்சி கொடுத்தார்.

❖ நரசிம்ம அவதாரத்தை எப்போது படித்தாலும் சரி, படித்து முடித்ததும் பானகம், பழவகை கள், இளநீரை நிவேதனமாக படைத்து வணங்குதல் வேண்டும்.

❖ "எல்லா பொருட்கள் உள்ளேயும் நான் இருக் கிறேன்" என்பதை உணர்த்தவே பகவான், நரசிம்ம அவதாரம் எடுத்தார். எனவே நரசிம்மரை எங்கும் தொழலாம்.

❖ திருமாலின் அவதாரங்களில் நரசிம்ம அவ தாரமே திடீரென தோன்றிய அவதாரமாகும். நரசிம்மரின் வலது கண்ணில் சூரியனும், இடது கண்ணில் சந்திரனும், இடையில் புருவ மத்தியில் அக்னியும் உள்ளனர்.

❖ நரசிம்மன் என்றால் ஒளிப்பிழம்பு என்று அர்த்தம். நரசிம்மனின் தேஜஸ் காயத்ரி மந்திரத்துக்குள்ளே இருப்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.

❖ நரசிம்ம அவதாரம் பற்றி ஜெர்மன் அறிஞர் மாக்ஸ்முல்லர் கூறுகையில், `An Electric Phenomenon' என்று கூறியுள்ளார்.

❖ இரண்யகசிபுவை வதம் செய்த போது எழுந்த நரசிம்மரின் சிம்ம கர்ஜனை 7 உல கங்களையும் கடந்து சென்றதாக குறிப்புகள் உள்ளது. மகாலட்சுமிக்கு பத்ரா என்றும் ஒரு பெயர் உண்டு. இதனால் நரசிம்மனை பத்ரன் என்றும் சொல்வார்கள். பத்ரன் என்றால் மங்களமூர்த்தி என்று அர்த்தம்.

❖ பகவான் பல அவதாரங்களை எடுத்தாலும், அவனுடைய நாமங்கள் இறுதியில் நரசிம்மரிடத்திலேதான் போய் முடியும் என்று கருதப்படுகிறது.

❖ சகஸ்ரநாமத்தில் முதன் முதலாக நரசிம்ம அவதாரம்தான் இடம் பெற்றுள்ளது.

❖ நரசிம்ம அவதாரத்தை எதைக் கொண்டும் அளவிட முடியாது என்ற சிறப்பு உண்டு.

❖ ராமாயணம், மகாபாரதம், பாகவதம், 18 புராணங்கள், உப புராணங்கள்அனைத்திலும் நரசிம்மருடைய சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ நரசிம்ம மந்திரம் ஒரு எழுத்தில் தொடங்கி, ஒரு லட்சத்து நூற்றி முப்பத்திரண்டு என்று விரிந்து கொண்டே போய் பலன் தரக்கூடியது. நரசிம்மர் எங்கெல்லாம் அருள் தருகிறாரோ, அங்கெல்லாம் ஆஞ்சநேயர் நிச்சயம் இருப்பார்.

❖ வேதாத்ரியில் உள்ள யோகநரசிம்மர் இடுப்பில் கத்தி வைத்துக் கொண்டிருக்கிறார். அறு வை சிகிச்சைக்கு செல்பவர்கள் இவரை வணங்கி சென்றால் நல்ல பலன் கிடைக்கும்.

❖ வாடபல்லி தலத்தில் உள்ள நரசிம்மரின் மூக்குக்கு எதிரில் ஒரு தீபம் ஏற்றப்படும். அந்த தீபம் காற்றில் அசைவது போல அசையும், நரசிம்மரின் மூச்சுக் காற்று பட்டு அந்த தீபம் அசைவதாகக் கருதப்படுகிறது. அதே சமயத்தில் நரசிம்மரின் கால் பகுதியில் ஏற்றப்படும் தீபம் ஆடாமல் அசையாமல் நின்று எரியும்.

❖ மட்டபல்லியில் உள்ள நரசிம்மரை வணங்கி னால் மன சஞ்சலங்கள் நீங்கும். நரசிம்மரை வழிபடும் போது "ஸ்ரீநரசிம்ஹாய நம" என்று சொல்லி ஒரு பூவைப் போட்டு வழிபட்டாலே எல்லா வித்தையும் கற்ற பலன் உண்டாகும்.

❖ "அடித்த கை பிடித்த பெருமாள்" என்றொரு பெயரும் நரசிம்மருக்கு உண்டு. அதாவது பக்தர்கள் உரிமையோடு அடித்து கேட்ட மறு வினாடியே உதவுபவன் என்று இதற்கு பொருள்.

❖ எல்லா வற்றிலுமே நரசிம்மர் நிறைந்து இருக்கிறார். எனவே நீங்கள் கேட்காமலே அவர் உங்களுக்கு வாரி, வாரி வழங்குவார். நரசிம்மரை மிருத்யுவேஸ்வாகா என்று கூறி வழிபட்டால் மரண பயம் நீங்கும்.

❖ ஆந்திராவில் நரசிம்மருக்கு நிறைய கோவில் இருக்கிறது. சிம்ஹசலம் கோவிலில் மூல வரின் உக்கிரத்தை குறைக்க வருடம் முழுவதும் சிலையின் மீது சந்தனம் பூசி மூடி வைத்திருப்பார்கள். வருடத்தில் ஒரு நாள் மூலவரை சந்தனம் இல்லாமல் பார்க்க முடியும்.


ஆன்மிகமலர் மெயில் புக் 1-15 ஜூன் 2020 23
www.aanmeegamalar.com

# ஸ்ரீ லக்ஷ்மண ஜெயம்



ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் ஏற்ற பின் ராமரை பார்த்து ஆசி கூற அகஸ்திய மாமுனிவர் அயோத்திக்கு வருகை புரிந்தார்.

அகஸ்தியர் சபையில் அமர்ந்ததும் ராவண வதம் பற்றி விவாதிக்கலாயினர் அனைவரும்.

அப்பொழுது அகஸ்தியர் சபையினரை பார்த்து, ராவண கும்பகர்ண வதத்தை விட, ராவணன் மகன் மேகநாதனை லக்ஷ்மணன் வதைத்ததே மாபெரும் வீர செயல் என்றார் அகஸ்தியர்.

அதை கேட்டு அனைவரும் ஆச்சிரியமாக அகஸ்தியரை பார்க்க, ஸ்ரீராமர் ஏதும் அறியாதவர் போல் "ஸ்வாமி எதை வைத்து அப்படி கூறினீர்கள் மேகநாதன் அவ்வளவு சக்தியுள்ளவனா" என்று கேட்க.

"ராமா எல்லாம் அறிந்தவன் நீ ஆனால் ஏதும் அறியாதவன் போல் லக்ஷ்மணின் பெருமையை என் வாயாலே கூற வேண்டும் என்றுதானே இப்படி அறியாதவன் போல் கேட்கிறாய் சரி நானே கூறுகிறேன்" என்று அகத்தியர் பேசத் துவங்கினார்.

சபையோர்களே... ராவ ணன் மகன் மேகநாதன் தேவலோக அரசன் இந்திரனுடன் போர்புரிந்து அவனை வென்று சிறையில் அடைத்து வைத்தது யாவரும் அறிந்ததே நான் முக கடவுளான பிரம்மா இந்திரனை விடுவிக்க மேகநாதனிடம் கோரிக்கை வைக்க மேகநாதன் இந்திரனை விடுவிக்க வேண்டுமென்றால் தாங்கள் எனக்கு மூன்று அறிய வரங்கள் தரவேண்டும் என நிபந்தனை வைத்தான் அவை

1.பதினான்கு ஆண்டுகள் உணவு உண்ணாதவனும்

2.அதே பதினான்கு ஆண்டுகள் ஒரு நொடி கூட உறங்காது இருப்பவனும்

3.அதே பதினான்கு ஆண்டுகள் எந்த ஒரு பெண் முகத்தையும் ஏறெடுத்து பார்க்காது இருப்பவன் எவனோ அவனால் மட்டுமே எனக்கு மரணம் நிகழவேண்டும்

என்று பிரம்மாவிடம் மூன்று அறிய வரங்களை பெற்று இந்திரனை விடுவித்தான், அதனால் மேக நாதனை யாவரும் இந்திரஜித் என்று அழைத்தனர்.

இப்படி பட்ட மேகநாதனை வதம் செய்த பெருமை லக்ஷ்மணனையே சேரும் என்று கூறி முடித்தார்.

"ஸ்வாமி லக்ஷ்மணன் என்னுடன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் இருந்த போது அவன் எந்த ஒரு மாதையும் (பெண்ணையும்) ஏறெடுத்து பார்த்த தில்லை என்பதை நான் அறிவேன் ஆனால் உணவும் உறக்கமும் இல்லாமல் எப்படி இருந்திருப்பான்" என்று ராமர் கேட்க

"அனைத்தும் அறிந்து வைத்து கொண்டே கேட்கி றாயே ராமா, சரி சற்று பொறு உன் கேள்விக்கான விடையை லக்ஷ்மணனிடமே கேட்டு தெரிந்து கொள் வோம்" என்று கூறி லக்ஷ்மணனை அழைத்து வர ஏற்பாடு செய்தார் அகஸ்தியர்.

சபைக்கு வந்த லக்ஷ்மணன் அண்ணன் ராமரையும் குரு அகஸ்தியரையும் சபையோரையும் வணங்கிய பின் ராமர் தன் சந்தேகத்தை கேட்டார்.

"லக்ஷ்மணா என்னோடு வனவாசம் இருந்தபோது எந்த பெண்ணையும் ஏறெடுத்து பார்க்காமையும் உணவு உண்ணாமையும் உறக்கம் கொள்ளாமையும் இருந்தாய் என அகஸ்தியர் கூறுகிறாரே எப்படி" என சபையோர் முன் விளக்கமுடியுமா.

"அண்ணா உங்களுக்கு நினைவு இருக்கலாம் ரிஷிமுக பர்வதத்தில் மாதா சீதையை தேடி அலைந்த போது மாதாவால் வீசப்பட்ட அணிகலன்களை சுக்ரீ வன் நம்மிடம் காட்டும்போது அன்னையின் பாத அணிகலன்களை தவிர வேறு எதுவும் என்னால் அடையாளம் காண முடியவில்லை,

காரணம் அன்னையின் பாதத்தை மட்டுமே பார்த்து நான் தினமும் வணங்குவேன் அதனால் பாத அணிகலன்களை மட்டுமே என்னால் அடையாளம் காணமுடிந்தது.

அடுத்து வனவாசத்தின் போது நீங்களும் மாதாவும் இரவில் உறங்கும்போது நான் காவல் புரியும் நேரம் நித்ராதேவி என்னை ஆட்கொள்ள வரும் நேரம், நான் நித்ராதேவியிடம் ஒரு வரம் கேட்டேன், 'அம்மா என் அண்ணன் ராமரையும் என் அண்ணியான மாதா சீதா தேவியையும் பாதுகாக்கவே நானும் அண்ணனோடு வனவாசம் வந்துள்ளேன் அதனால் எங்கள் வனவாசம் முடியும் வரை என்னை நீ ஆட்கொள்ளவே கூடாது இந்த வனவாசம் முடியும் வரை எனக்கு உறக்கமே வரக்கூடாது' என வேண்டிக்கொண்டேன்.

நித்ராதேவியும் என் வேண்டுதலுக்கு செவி சாய்த்து 'என்னை பதினான்கு ஆண்டுகள் ஆட்கொள்ள மாட்டேன்' என வரமளித்தாள். அதனால் எனக்கு உறக்கம் என்பதே இல்லாமல் இருந்தது.

நம் குருநாதராகிய விஸ்வாமித்திரரின் யாகம் வெற்றி பெற காவல் புரிந்ததற்காக நம் உடல் சோர்வு அடையாமல் இருக்கவும் பசியே எடுக் காமல் இருக்கவும் 'பலா அதிபலா' என்னும் மிகவும் சக்திவாய்ந்த காயத்திரி மந்திரத்தை நம் இருவருக் கும் உபதேசித்தார்.

குருநாதரின் அந்த மந்திரத்தை வனவாசத்தின் போது தினமும் உச்சரித்து வந்தேன், இதனால் எனக்கு பசி ஏற்படாமலும் உடல் சோர்வு அடையாமலும் பார்த்துக்கொண்டேன்" என்று லக்ஷ்மணசுமனன் கூறினார்.

சபையினர் எல்லோருமே லக்ஷ்மணனை ஆச்சிரிய மாக பார்க்க, ஆஞ்சநேயர் அயர்ந்தே போனார்.

லக்ஷ்மணின் ராம பக்தியை நினைத்து ராமர் அரியணையை விட்டு இறங்கி வந்து லக்ஷ்மணனை கண்ணீருடன் ஆரத்தழுவி கொண்டார்.

ஸ்ரீ ராமஜெயம் சொல்வது எவ்வளவு புண்ணியமோ அப்படியே, ஸ்ரீ லக்ஷ்மண ஜெயம் சொல்வது புண்ணியமே..!


ஆன்மிகமலர் மெயில் புக்

# கஷ்டம் என்ற துன்பத்தை மூலையில் போட்டுவிட்டு நம் பணியை கவனித்தால் கஷ்டம் கஷ்டமாக தெரிவதில்லை

ஆசை தான் துன்பத்திற்கு காரணம்

ஆம் அப்படித்தான் புத்தர் சொல்கிறார்

தங்க நகைகளால் தன்னை அலங்காரம் செய்து கொள்ள ஆசைப்படுகிறாய்

அதற்கு தங்கம் நம்மிடம் இல்லையே என்று வருத்தப்படுகிறாய் இது முதலாவது துன்பம்

தங்கம் வாங்க பணம் வேண்டும் பணத்தை பெற உடலை வருத்தி உழைக்கிறாய் இது இரண்டாவது துன்பம்

வாங்கிய தங்கத்தை பாதுகாக்க வேண்டுமே திருடர்கள் எவராவது களவாடிவிட்டால் என்ன செய்வது என்று வருந்துகிறாய் இது மூன்றாவது துன்பம்

ஒரு நிலையில் அந்த தங்கம் உன்னை விட்டு போய் விடுகிறது விரும்பியதை இழந்து விட்டோமே என கண்ணீர் விடுகிறாய் இது நான்காவது துன்பம்

சிறியதான ஒரு அலங்கார ஆபரண ஆசையே நான்கு விதமான துன்பத்தை தரும் போது மண்ணாசை பெண்ணாசை பதவி ஆசை அதிகார ஆசை என்ற பேராசைகள் எத்தனை வகையான துன்பங்களை தரும்?



ஒரு நிமிடம் யோசி ஆனந்தமான சுகமான சந்தோஷமான வாழ்க்கையை ஒரு சிறிய ஆசைக்கு பலி கொடுத்து வாழ்க்கை முழுவதையும் நரகமாக்கி கொள்ள வேண்டுமா? எனவே ஆசையை விடு என்கிறார் புத்தர்

புத்தர் மட்டுமா அப்படி சொல்கிறார்? சர்வலோகத்தையும் சிருஷ்டித்து காத்து வரும் வாசுதேவ கிருஷ்ணன் கூட காமிய கர்மம் செய்யாதே நிஷ் காமிய கர்மம் செய் என்கிறான் காமியம் என்றால் ஆசை பற்று எதிர்பார்ப்பு என்பது பொருள் நிஷ் காமியம் என்றால் அவைகள் இல்லாத நிலை என்பது பொருளாகும்

நமது தமிழ் கூறும் நல்லுலகின் மிகப் பெரிய ஆச்சார்ய புருஷரான திருவள்ளுவர்

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

என்கிறார் அதாவது வாழ்க்கை கெடாமல் அமைய வேண்டும் என்றால் ஆசையை ஒழிக்க வேண்டும் என்பது அவரின் வலுவான கருத்து

ஆசைதான் துன்பத்திற்கு காரணம் என்று வள்ளுவர் சொல்லுகிறார் புத்தரும் அதை ஆமோதிக்கிறார்

கண்ணபெருமானும் அது தான் சரி என்று சான்றிதழ் தருகிறார். பெரியவர்கள் எல்லோரும் ஒருமித்த கருத்தில் பேசுகிற போது சிறியவர்களான நாம் அதை மறுத்து பேசினாலோ அல்லது சந்தேகப்பட்டு கேள்வி எழுப்பினாலோ மரியாதை குறைவான செயல் என்று நமது பண்பாடு பறை சாற்றுகிறது. இருந்தாலும் நமது மனது அற்பமான மனது தானே? அதில் சில சந்தேகங்கள் எழும்பாமல் இருக்கவே முடியாது. அப்படி ஒரு வலுவான சந்தேகம் இப்போது சமீப காலத்தில் ஏற்பட்டது அந்த சந்தேகம் உண்மையாகவே மனிதனின் துயரங்களுக்கு ஆசை மட்டும் தான் காரணமா? அதையும் தாண்டி வேறு காரணங்கள் எதுவுமே இல்லையா? என்பது தான்

முதலில் ஆசை என்றால் என்ன? அது ஒரு உணர்ச்சி

பசி ஒரு உணர்ச்சி,

தாகம் ஒரு உணர்ச்சி,

கோபம் ஒரு உணர்ச்சி,

மூக்கில் ஊறல் எடுப்பது முதுகில் சொறிந்து விட்டால் சுகமாக இருக்குமே என்று தோன்றுவது எல்லாமே உணர்ச்சி தான். அதே போன்று ஆசையும் ஒரு உணர்ச்சி அதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஆனால் ஆசை என்ற உணர்ச்சிக்கும் மற்ற உணர்ச்சிக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. எப்படி என்றால் ஆசை போடுகிற குட்டி உணர்சிகள் ஏராளம். உதாரணமாக கோபம் பயம் மோகம் காமம் என்று எத்தனையோ சொல்லி கொண்டே போகலாம். அத்தனை உணர்ச்சிக்கும் மூல உணர்ச்சியாக இருப்பது ஆசை

ஆசை என்பது மூல உணர்ச்சியாக இருக்கட்டும் அது பல்வேறுபட்ட உணர்சிகளை தூண்டி மனிதனை பாதாள குழிகளில் தள்ளுவதாக கூட இருக்கட்டும் ஆனாலும் ஆசை என்பது மனிதனுக்கு உள்ளே தோன்றுகிற உணர்ச்சி தானே தவிர வெளியே இருந்து வருகின்ற எதிரி அல்ல. அது உள்ளுக்குள்ளேயே இருந்து வருவதனால் தான் அதை அடக்கு ஆடவிடாதே என்று பெரியவர்கள் சொன்னார்கள்.




இந்த கருத்தை மையமாக வைத்து சிந்தித்தால் துன்பத்திற்கு அகக்காரணம் ஆசை என்று துணிந்து சொல்லலாம். அகம் என்று ஒன்று வந்துவிட்டாலே புறம் என்று இன்னொன்று இருக்கும் தானே எனவே துன்பத்திற்கு ஆசையை மட்டுமே குற்றவாளியாக்குவது எந்தவகையில் நியாயம்?

மாடி வீடு கட்ட தோன்றுவது உள்ளே இருந்து வருகிற ஆசை அதிகார பதவியை பிடித்து உட்கார சொல்லுவது உள்ளே இருந்து வருகிற ஆசை ஆனால் விஷக்கிருமிகளால் நோய் தோற்று ஏற்படுகிறதே அது உள்ளே இருந்து வருகிற துன்பமா? வாகன விபத்தில் மாட்டி உடல் உறுப்புகளை இழந்து விடுகிறோமே அது ஆசையால் ஏற்பட்டதா? யாரையோ ஒருவரை காப்பாற்ற போய் நாம் சிக்கலில் மாட்டிக்கொள்கிறோமே அதுவும் உள்ளே இருந்து புறப்பட்ட உணர்ச்சியால் வந்த துன்பமா? நிச்சயம் இல்லை

அது என்னை மீறி நடக்கிறது. நான் எதிர்பாராமல் என்னை தாக்குகிறது, அதே நேரம் சம்மந்தம் இல்லாத என்னை துன்பத்தில் ஆழ்த்துகிறது. எனவே இப்படிபட்ட துன்பங்களை புறக்காரணங்களால் வருகிற துன்பம் என்று தான் கருதவேண்டும்.

துன்பத்தின் ஊற்றுக்கண் இத்தோடு நிற்கவில்லை அகக்காரணங்கள் என்பதையும் தாண்டி புறக்காரணங்கள் என்பதையும் தாண்டி மூன்றாவதாகவும் துன்பத்திற்கு ஒரு காரணம் இருப்பதாக தெரிகிறது. அது தான் இயற்கை காரணம்.

நேற்றுவரை நன்றாக வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் இன்று காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வீடு


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 ஜூன் 2020 27
www.aanmeegamalar.com

# புதிய துவக்கம்
## aanmeegamalar

YouTube channel

வாசல் மனைவி மக்கள் அனைவரையும் இழந்து நிவாரணமே இல்லாத துன்பக்கடலில் தள்ளப்பட்டு விடுகிறான்.

ஆழிப்பேரலை வருகிறது ஆற்றில் பெருவெள்ளம் ஏற்படுகிறது இவையெல்லாம் மனிதனை துன்பத்தில் பிடித்து மூழ்கடிக்கிறது வறட்சி பஞ்சம் பட்டினி என்று வெவ்வேறு விதமான கொடுமைகளும் மனிதனுக்கு ஏற்படுகிறது.

இவற்றை எல்லாம் வைத்து பார்க்கும் போது ஆசை மட்டுமே துன்பத்திற்கு காரணம் என்று பெரியவர்கள் சொன்னது எப்படி சரியான கருத்தாக இருக்குமென்று எண்ணத்தோன்றுகிறது. என்னால் என்னுடைய எண்ணத்தால் என்னுடைய செயலால் துன்பம் வருகிறது என்றால் அதற்கு ஆசையை அடக்கினால் போதும் நான் துன்பம் இல்லாத பெரும் வாழ்வு வாழ்ந்து விடலாம்.

ஆனால் அது முடியவில்லையே நோய் வருகிறது விபத்து வருகிறது. எதிர்பாராத தாக்குதல் வருகிறது இயற்கை பேரழிவு வருகிறது இவையெல்லாம் எனக்கு துன்பத்தை தருகிறதே நான் ஆசையை அடக்குனால் இவைகளெல்லாம் சரியாகிவிடுமா? என் துன்ப வாழ்க்கை மறைந்து போய்விடுமா? இந்த கேள்விக்கு சரியான பதிலை என்னால் பெறமுடியவில்லை.

கர்ம வினையாலும் துன்பம் வருகிறது என்கிறார்கள் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம் ஏனென்றால் இந்த ஜென்மத்தில் இந்த பிறப்பில் இன்று நான் செய்யகூடிய செயல்களுக்கான பலன்களை மட்டுமே என்னால் நேராக காணமுடிகிறது. என் சென்ற ஜென்மத்து கர்மாக்கால் என்பதும் என் மூதாதையர்களின் கர்மா என்பதும் என் கண்களால் காணமுடியாதவைகள் அதை பற்றி நான் உறுதியாக நம்பவும் முடியாது நம்பாமல் இருக்கவும் முடியாது. ஆனால் ஒன்று மட்டும் சர்வ நிச்சயம் நான் ஆசைபட்டாலும் துன்பம் வருகிறது ஆசை படாமல் இருந்தாலும் துன்பம் வருகிறது.

இந்த துன்பத்திலிருந்து விடுவதலை பெறுவதற்கு வழியே கிடையாதா? என்று நான் ஆழமாக பலகாலமாக யோசித்தேன் அந்த யோசனையின் விளைவாக எனக்கொரு அனுபவம் ஏற்பட்டது அது துன்பத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளுவது சகித்துக்கொள்ளுவது என்பது தான்

துன்பத்தை ஏற்றுகொள்வதற்கு அனுபவமும் மனதுணிச்சலும் வேண்டும் கடற்கரையில் வீட்டை கட்டினால் அலைகளிலிருந்து தப்பமுடியாது என்பது போல மனிதனாக பிறந்துவிட்டால் கஷ்டப்படாமல் இருக்க முடியாது என்பதும் நிஜம் என்று இருக்கும் போது அந்த கஷ்டத்தை எதிர்த்து போராடி என் சக்தியை எதற்காக வீணடிக்கவேண்டும்?

வீட்டிலே எத்தனையோ பொருட்கள் உபயோகம் இல்லாமல் மூலையில் கிடக்கிறது அதே போன்று இந்த கஷ்டத்தையும் ஒரு மூலையில் தூக்கி போட்டுவிட்டு என் வேலையை நான் கவனிக்க துவங்கிவிட்டால் கஷ்டம் கஷ்டமாக தெரிவதில்லை. அப்படி ஒன்று உலகத்தில் இருப்பதாகவே என் கவனத்தில் வரவில்லை இது நல்லதாக தெரிகிறது நல்ல அனுபவமாகவும் இருக்கிறது

இந்த அனுபவமும் கஷ்டத்தை தாங்கும் துணிச்சலும் எப்படி வருகிறது என்றால் நிச்சயம் நல்ல ஆஸ்திக மனப்பான்மை அவைகளை தருகிறது. ஆயிரம் துன்பங்கள் வந்தாலும் இறைவனை பாடினால் இறைவனை நினைத்தால் எனக்குள் சந்தோசம் ஊற்றெடுக்கிறது என்பதை நான் கண்டுகொண்டால் எந்த துன்பமும் என்னை தீண்டுவதை நான் உணரவே மாட்டேன். எனவே துன்பத்தை வெல்ல நான் கண்ட ஒரே வழி இறைவனை நோக்கி நமது சிந்தனையை செலுத்துவதாகும். நீங்களும் அப்படி செய்ய முயற்சித்து பாருங்கள் கண்டிப்பாக ஒருநாள் வெற்றி கிடைக்கும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434





மொபைலில் ஆன்மிகமலரை முழுவதும் படிக்க
Google Play Store aanmeegamalar டவுன்லோடு செய்து
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் எதுமில்லை




இதழ் முழுவதும் இலவசமாக படிக்கலாம்...

# குருமந்திரமும் ஆன்மீக பலமும்

எனக்கு குரு உபதேசித்த குரு மந்திரத்தை மட்டுமே ஜபித்தால் போதுமா அல்லது நான் சார்ந்துள்ள எனது மதத்தை சேர்ந்த இறைவனது நாமத்தையும் ஜபிக்க வேண்டுமா?

1. குருமந்திரத்தின் வரைவிலக்கணம்

தனது ஆன்மீக வளர்ச்சியின் மூலமாக ஒரு சிஷ்யன் இறைவனை உணர்வதற்கு அனுகூலமாக ஒரு குரு அவனுக்கு இறைவனின் நாமம், மந்திரம், எண் அல்லது ஒரு வார்த்தை இவைகளில் ஏதாவது ஒன்றை உபதேசிப்பதே குருமந்திரம் எனப்படுகிறது. பெரும்பாலும் சிஷ்யனது ஆன்மீக வளர்ச்சிக்கு அனுகூலமான இறைவனது நாமத்தை குரு சிஷ்யனுக்கு உபதேசிப்பதே வழக்கமாக உள்ளது.



இறைவனை உணர்தல் என்பது ஒரு மனிதன் அடையக் கூடிய மிக உன்னதமான ஆன்மீக அனுபவமாகும். அதாவது ஒருவர் இடை விடாது தொடர்ச்சியாக இறை தத்துவத்துடன் ஒன்றியிருக்கும் அனுபவம் அல்லது தொடர்ச்சியாக ஆனந்த நிலையில் இருக்கும் அனுபவமாகும்.

55% ஆன்மீக நிலையில் உள்ள ஒருவரே சிஷ்யனாக கருதப்படுகிறார். இதன் பொருள் என்னவென்றால் ஒரு ஸாதகன் எப்போது தனது ஆன்மீக வளர்ச்சியில் அதீத ஈடுபாடு கொண்டு அதற்காக தன் உடல், மனம், செல்வம் எல்லாவற்றையும் 55% ற்கு மேல் தியாகம் செய்ய தயாராக உள்ளானோ அப்போதே அவன் சிஷ்யனாகும் தகுதியுள்ளவன் ஆகிறான். ஆன்மீக பயிற்சியின் 6வது அடிப்படை கோட்பாடு என்ற கட்டுரையை பார்க்கவும்.

2. குருமந்திரத்தின் ஆன்மீக பலம்

குருமந்திரத்தின் பலாபலன் அதை உபதேசிப்பவரின் ஆன்மீக நிலையைப் பொருத்து இருக்கிறது.

**குருமந்திரத்தின் ஆன்மீக பலம்**

| நாமத்தை அளிப்பவரின் ஆன்மீக நிலை (%) | அளித்த நாமத்திலுள்ள சைதன்யத்தின் அளவு (%) |
|---|---|
| 50% | 2% |
| 60% | 10% |
| 70% | 80% |
| 80% | 90% |
| 90% | 100% |
| 100% | 100% |

மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டபடி ஒரு குரு அல்லது மகான் 70% ஆன்மீக முன்னேற்றம் அடைந்த நிலையில் இருந்தாலே அவர் உபதேசிக்கும் குருமந்திரம் உண்மையான ஆன்மீக பலம் அல்லது சக்தி பொருந்தியதாக இருக்கும். பெரும்பாலான மக்கள் அறியாமையினால் மகான்கள் அல்லாதவர்களின் ஆன்மீக வழி காட்டுதலை பின்பற்றுகிறார்கள். இது தவறில்லை. ஏனெனில் சாதாரண நடைமுறைப்படி ஒரு மனிதன் தன்னை விட 20% அதிக ஆன்மீக நிலை உள்ள ஒருவர் சொல்வதையே புரிந்து கொண்டு கடைபிடிக்க முடியும். உதாரணமாக 30% ஆன்மீக நிலை உள்ள ஒரு மனிதனுக்கு 50% ஆன்மீக நிலையில் உள்ள ஒருவரின் ஆன்மீக வழிகாட்டுதலே பொருத்தமாக இருக்கும். ஒரு மனிதன் உண்மையான ஈடுபாட்டுடன் ஆன்மீக பயிற்சி செய்வதுடன் ஆன்மீகத்தில் உன்னத நிலை அடைய வேண்டும் என்னும் தீவிர ஈடுபாடும் உடையவராக இருந்தால் அப்போது வெளிப்படாத குருதத்துவம் அந்த ஸாதகரின் வாழ்க்கையில் அவரது ஆன்மீக வளர்ச்சிக்கு அனுகூலமான சந்தர்ப்பங்களை (ஆன்மீக வழிகாட்டிகள் அடிப் படையில்) ஏற்படுத்திக் கொடுக்கும்.

3. குரு எனக்கு உபதேசித்த குருமந்திரத்தை மட்டுமே ஜபித்தால் போதுமா அல்லது நான் சார்ந்துள்ள எனது மதத்தை சேர்ந்த இறைவனது நாமத்தையும் ஜபிக்க வேண்டுமா?

மேலே குறிப்பிட்ட கேள்விக்கு பதில் குருமந்திரம் கொடுக்கப்பட்ட சூழ்நிலையை பொருத்தே அமையும்.

1.மந்திரம் கொடுத்த குரு 70% க்கு மேற்பட்ட ஆன்மீக நிலையிலும் சிஷ்யன் 55% ஆன்மீக நிலைக்கு மேற்பட்டும் இருத்தல் வேண்டும்.

இந்த நிலையில் குருவின் ஸங்கல்பத்தினால் அந்த மந்திரத்தில் ஆன்மீக பலம் நிறைந்திருப்பதால் அந்த சிஷ்யன் அந்த குருமந்திரத்தை தொடர்ந்து ஜபம் செய்வது மிகவும் நன்மை பயக்கும்.

2.உபதேசம் செய்யும் குரு 70% ஆன்மீக நிலை யிலும் சிஷ்யன் 30% 40% ஆன்மீக நிலையில் இருந்தால் மேலே குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒருவருக்கு குருமந்திரத்திலோ அல்லது அவர் பிறந்த மதத்திற்குரிய கடவுளின் பெயரையோ, எதில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளதோ அந்த நாமஜபத்தை மேற்கொள்ளலாம்.

50% ஆன்மீக நிலை அடைந்த ஒருவர் உபதேசிக்கும் நாமஜபத்தை ஒருவர் செய்தாலும் அதுவும் ஒரு விதத்தில் அவருக்கு நன்மை பயக்கும். எவ்வாறெனில் மற்றவர் உபதேசித்த மந்திரத்தை ஜபிப்பதன் மூலம் அவர் சுய இச்சையிலிருந்து மற்றவரின் இச்சை என்ற நிலைக்கு உயர்கிறார். அதாவது தனது சுய விருப்பத்தை விட்டுக் கொடுத்து மற்றவரது விருப்பத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவரது அஹம்பாவம் அந்த அளவிற்கு குறைகிறது. ஆன்மீக வளர்ச்சியில் உன்னத நிலை எட்ட வேண்டும் என்ற தீவிர ஈடுபாடு உடைய ஒரு ஸாதகர் குருமந்திரத்தை முழு நம்பிக்கையுடன் தொடர்ந்து ஜபித்து வருவாராயின் அவரது வாழ்க்கையில் வெளிப்படாத நிலையில் உள்ள குரு தத்துவமே ஒரு உண்மையான குருவிடம் அவரை கொண்டு சேர்க்கும்.

4. குருமந்திரத்துடன் தொடர்புடைய சில குறிப்புகள்: சிலரது வாழ்க்கையில் ஏற்படும் சில பிரச்சனைகளின் மூல காரணம் ஆன்மீக சம்பந்தப்பட்டதாக இருந்தால் அந்த சமயங்களில் அதிலிருந்து விடுபட அதாவது அந்த ஸாதகர் தனது ஆன்மீக பயிற்சிகளுக்கு ஏற்படும் இடையூறுகளில் இருந்து விடுபட சில மகான்கள் சில மந்திரங்களை உபதேசிக்கக் கூடும். இது அந்த பிரச்சனைக்கு நிவாரணமே தவிர அதையே குருமந்திரமாக நினைக்கக் கூடாது. குருமந்திரம் என்பது ஆன்மீக முன்னேற்றத்தில் உன்னத நிலையை அடைந்து இறை தத்துவத்தை முற்றிலுமாக உணர்ந்து கொள்ள மட்டுமே உதவும் என்பதை ஸாதகர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

சிலர் குருமந்திரம் கொடுக்கும்படி குருவை வற்புறுத்தலாம். குரு ஸ்தானத்தில் உள்ள ஒரு சிலர் சிஷ்யனின் வற்புறுத்தலுக்காக குருமந்திரமும் கொடுத்து விடலாம். ஆனால் ஸாதகர்களது தியாக உணர்வும் இறை தத்துவத்தை உணர்வதில் அவர்களுக்கு உள்ள ஆர்வமும் 55% இருந்தாலே குருமந்திரம் அவர்களுக்கு பயன்படும். இல்லையென்றால் குருமந்திரம் பெயரளவில் மட்டுமே இருக்கும். அதே போன்று ஆர்வமோ சிரத்தையோ இன்றி பணத்தைக் கொடுத்து பெற்றுக் கொள்ளும் குருமந்திரமும் பெயரளவிலேயே இருக்கும்.

ஒருவரது ஆன்மீக முன்னேற்றத்திற்காக குரு அவருக்கு குருமந்திரம் கொடுத்தாலும் அந்த ஸாதகர் ஸத்சேவை தியாகம், எதிர்பார்ப்பில்லாத அன்பு ஆகிய தன்மைகளை கொண்டிருந்தாலே அவரது குருமந்திர ஜபம் முழு பயனை அளிக்கும்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626





# பெண்கள் காலையில் சமைக்கவேண்டியது

பெண்கள் காலையில் சமையலறைக்கு சென்றதும் எதை முதலில் சமைக்க வேண்டும்?*

சாஸ்திரம் என்ன சொல்கிறது?.

பெண்கள் காலையில் எழுந்து சுத்தமாக குளித்து முடித்துவிட்டு, சமையலறைக்கு சென்று, சமையலறையை சுத்தம் செய்த பின்பு, எதை சமைப்பார்கள்!

அதாவது சாதம், குழம்பு, ரசம், பொரியல், கூட்டு, சிலர் வீட்டில் வளர்ந்து வரும் நவ நாகரீக சூழ்நிலைக்கு ஏற்ப பலகாரங்கள் கூட செய்யப்படும். இட்லி, தோசை, பூரி, பொங்கல் இவைகள் கூட செய்யலாம். ஆனால் நம்முடைய பாரம்பரியப்படி அந்த காலங்களில் எல்லாம் நம் முன்னோர்கள் எந்த முறையை பின்பற்றி வந்தார்கள்?

அதைத் தெரிந்து கொள்வதற்கு முன்பு, ஒரு சிறிய புராண கதை.

காரைக்கால் அம்மையாரை பற்றிய கதைதான் இது. காரைக்கால் அம்மையாரை பற்றி நம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும்.

சிவபெருமானை காண்பதற்கு கைலாயம் சென்றபோது, ‘கைலாயம் என்பது சிவன் வசிக்கும் இடம்’. அந்த இடத்தை காலால் எப்படி மிதிப்பது? என்று, தன்னுடைய தலையால் நடந்து சென்று சிவபெருமானை தரிசனம் செய்த பெருமை இவருக்கு உண்டு.

ஒருநாள் காரைக்கால் அம்மையாரது வீட்டிற்கு சன்னியாசி வேடத்தில் வருகை தந்தார் ‘ஈசன்’.

அந்த காலங்களில் எல்லாம் பிச்சை கேட்டு வரும் அடியார்களுக்கு எதுவும் இல்லை என்று சொல்லாமல் உபச்சாரம் செய்வது என்பது நம்முடைய பாரம்பரியமாக இருந்து வந்தது.

அந்த சன்னியாசி பிச்சை கேட்டு வந்த அந்த நேரத்தில், காரைக்காலம்மையார் வீட்டில் வெறும் சாப்பாடு மட்டுமே இருந்தது. சாப்பாட்டுடன் சேர்த்து இரண்டு மாம்பழங்களும் இருந்தன. சாதத்திற்கு குழம்பு எதுவும் இல்லாத நிலையில் என்ன செய்வது என்று தெரியாத அம்மையார், ஒரு பாத்திரத்தில் சாதத்தையும் மாம்பழத்தையும் மட்டும் போட்டு தன் வீட்டிற்குப் பிச்சை கேட்டு வந்த அந்த சன்னியாசிக்கு கொடுத்துவிட்டார்.

ஆனால் சன்னியாசி வேடத்தில் வந்திருக்கும் அந்த முனிவர் சிவன் தான், என்ற உண்மை காரைக்கால் அம்மையாருக்கு தெரியாது.

காலை வேலையில், வெறும் சாதத்தை மட்டுமாவது வடித்து வைத்திருந்ததால் தான், பசியோடு வந்த அடியாருக்கு தன் வீட்டில் இருந்த சாதத்தை மட்டுமாவது, காரைக்கால் அம்மையாரால், உணவாக தர முடிந்தது.

அன்று மட்டும் காரைக்காலம்மையார் முதலில் சாதத்தை வடிக்காமல், குழம்பு மட்டுமே வைத்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்?

ஈசனாக வந்த அடியார்களுக்கு ஏதும் இல்லை என்று இறைவனை ஏமாற்றத்திற்குள்ளாக்க வேண்டியிருந்துக்கும்.

காரைக்கால் அம்மையார் சிவபெருமானை சரண் அடைந்ததற்கு, இதுவும் ஒரு காரணமாக நம்முடைய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இதோடு மட்டுமல்லாமல் காலையில் வடித்த சாதத்தோடு சிறிது நெய் சேர்த்து இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைக்கும் பழக்கத்தை நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

காலையில் எழுந்ததும் நாம் எதை வேண்டுமென்றாலும் சமைக்கலாம். ஆனால், அதையெல்லாம் சமைப்பதற்கு முன்பாக முதலில் சாதத்தை வடிக்கும் பழக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த சாதத்தை நெய் விட்டு இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைத்து விட்டு, அதன்பின்பு அந்த நாளைத் தொடங்கிப் பாருங்கள். நிச்சயமாக வித்தியாசத்தை உங்களால் உணர முடியும். அந்த காலமாக இருந்தாலும், இந்த காலமாக இருந்தாலும், நம்முடைய சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயம் எதுவுமே பொய்யாகாது.

காரணமில்லாமல் எந்த ஒரு செயலையும் நம் முன்னோர்கள் நமக்காக சொல்லி வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றும் சிவ வழிபாட்டை தீவிரமாக கடைப்பிடிக்கும் பல குடும்பத்தில் பெண்கள் காரைக் காலம்மையார் வழிமுறையை பின்பற்றி காலை எழுந்ததும் குளித்துவிட்டு சமையலில் சதத்தை வடித்து சிவபெருமானுக்கு படைத்த பின்பே மற்ற பணியை செய்வதை கடமையாக கொண்டுள்ளனர்.

இறைவனை அடைய மகான்கள், ஞானிகளின் வாக்கை பின்பற்றலாம் அல்லது அவர்கள் பின்பற்றிய இறைவழிபாட்டு முறையை பின்பற்றி வந்தாலே இறைவன் நம்மை ஆட்கொள்வார்.

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில்
உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033


# திடமான எண்ணத்தை இரண்டாக பிரிக்கிறார்கள்

நான் இதைத்தான் அடைவேன் அல்லது அடைய வேண்டும் என்பது இயங்குகின்ற ஒரு உள்நோக்கமாகும். இது இருந்தால் நீ எய்த வேண்டி யதை எய்திவிடுவாய். இது ஒரு எண்ணச்சூழ்ச்சி அல்ல. இதுவே ஒரு வெற்றியாகும்.

❖❖❖

இதைத்தான் அடைய வேண்டும் என்ற திடமான எண்ணத் தை இரண்டு வகைகளாக பிரிக்கிறார்கள். அதிலே ஒன்று நல்லது மற்றொன்று கெட்டது. இரண்டும் நல்லது கெட்டது என்று பிரிந்திருந் தாலும் இரண்டுமே திடமான எண்ணங்கள்தான். ஆகவே இரண்டிலும் குறிக்கோளும் வெற்றியும் அடங்கி இருக்கின்றன.

❖❖❖



உலகம் எப்பொழுதுமே கெட்ட திட எண்ணத்தை கண்டிக் கிறது. கூடவே நல்ல திட எண்ணத்தை ஆதரித்து அதையே அந்த சமுதாயத்தின் எண்ணம் என்று சொல்லுகிறது. தட்டிக் கொடுக் கின்ற இத்தன்மையே இத்தகைய சமுதாயம் செய்கின்ற மேலோர் பாராட்டுகின்ற எண்ணமாகும்.

❖❖❖

திட எண்ணம் என்பது வேலையும் தொண்டும் செய்வதற்கு பயன்படுகிறது. தொண்டு எண்ணம் கொண்ட வேலை நமது சிந்தனையையும் மூளையையும் செழிக்கச் செய்கின்றது.

❖❖❖

திடமான நல்ல உள்நோக்கங்கள் மலர்கள் வாசனையைப் பரப்புவதைப் போன்று நல்ல பொருளையும் பரப்புகின்றது. ஆகவே சமுதாயத்தின் வேலையும் சக்தியும் ஆகும். இத்தகைய நல்ல உள் நோக்கம் மனிதனுக்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டு.

❖❖❖

எல்லாவிதமான கெட்ட உள்நோக்கங்களில் கூட குறிக்கோள் களும் பயன்களும் இருக்கின்றன. ஆயினும் இதை நிறைவேற்றினால் துன்பப்படுபவர்கள் மனிதர்களே.

❖❖❖

கெட்ட உள்நோக்கத்தை உயர்ந்த கலைகளிலும் பரம்பரை தன்மைகளிலும் வைத்து கருத்து கற்பித்தால் அது எப்போதும் நல்லதே அல்ல. இப்படி செய்த அவர்கள் மொத்தமாக அவையும் கெட்டு நாட்டையும் கெடுத்து விடுகின்றது.

❖❖❖

உண்மையான நல்ல உள்நோக்கம் ஒரு குழந்தையை நல்ல முறையிலும் உயர்வான சிந்தனையிலும் கொண்டுவர உதவிடுகின்றது. இச்செயலை ஒரு பெரிய நற்தொண்டு என்றே சொல்லுகிறார்கள்.

❖❖❖

சிறப்பிக்க கூடிய விருப்பம் என்பது மனித உயிரின் விருப்பத்தை எடுத்துக்காட்டுகின்ற கொள்கையாகும். இங்கே நான் உன்னுடைய எடுத்துக்காட்டக்கூடிய சிறப்புத்தன்மை எது என்று கேட்கவில்லை. ஆனால் நான் உனது காரணமான உயிரின் சிறப்புத்தன்மை என்ன என்பதையே கேட்டேன். இதற்கு ஒருவன் பதில் சொல்லி விடுவானேயானால் அவனே உலகில் சிறப்புத்தன்மை கொண்ட கொள்கையை வெளிப்படுத்துகின்ற மனிதனாகும்..

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# “திருப்பாற்கடலில் பள்ளிகொண்டாயே ஸ்ரீமந் நாராயணா” பாடல் தோன்ற காரணமான காஞ்சி பெரியவா

புகழ்பெற்ற கவிஞரான திரு கண்ணதாசன் ஒருமுறை காஞ்சிபரமாச்சார்யாரை சந்தித்தார். வழக்கம்போல ஆன்மீக விசாரங்கள் நடைபெற்றது.

கண்ணதாசன் ஆன்மீகப் பாதையில் திரும்பும் முன் நாஸ்திகக் கொள்கையாளராகவும், மதங்களை விமர்சித்துக் கட்டுரை எழுதுபவராகவும் இருந்தார். ஆனால் பரமாச்சார்யார் அவரை தேவையற்ற பகுத்தறிவுவாத்த்தில் இருந்து வெளிக்கொணர்ந்து, மெது மெதுவே ஆன்மீக ஞானம் பெற செய்தார்.

ஆனால் அடிப்படையில் விமர்சனம் செய்யும் போக்கானது தொடரவே செய்த்து அவரிடம்.



கண்ணதாசன் கேட்டார், “பால் வெண்மை நிறமானது. ஆனால் பாற்கடல் ஏன் மேகவர்ணமாய் காட்டப்படுகிறது? இறைவனான ஸ்ரீவிஷ்ணுவின் நிறம், பாற்கடலில் கலந்து விட்டதா?”.

ஆச்சார்யார் சிரித்துக் கொண்டே உனக்கான பதில் மதியம் கிடைக்கும் என்று கூறி கண்ணதாசனை குழப்பத்தில் ஆழ்த்தினார்.

அன்றைய தினம் மதியத்தில் உம்மிடியார் மடத்திற்கு வந்தார். கண்ணதாசனும் உம்மிடியாரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குள் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். பின்னர், உம்மிடியார் ஒரு பச்சை மரகதக்கல்லை ஆச்சார்யாரின் பாதத்தில் ஏற்றுகொள்ள வேண்டிச் சமர்ப்பித்தார்.

கல்லுக்கும் மணிக்கும் பாகுபாடு பார்க்காத ஆச்சார்யார், காரியதரிசியை அழைத்து பாத்திரத்தில் பால் கொண்டு வரப் பணித்தார். பாலில் மரகதத்தை முக்கினார் ஆச்சார்யார்.

நகைத் தொழிலில், கல்லின் தரத்தைச் சோதிக்கப்படும் முறை அது. உம்மிடியாரோ திகைத்துப் போனார்.

தன் குணத்தின் பேரில் சந்தேகமா இல்லை மரகதத்தின் பெயரில் சந்தேகமா என்று உம்மிடியார் குழம்பிப் போனார்.

ஆச்சார்யார் பொறுமையாக கண்ணதாசனை அழைத்துப் பாலைக் காட்டினார். வெளிர்பச்சை வர்ணத்தில் பால் மாறிப்போய் இருந்தது.

வாயடைத்துப் போன கண்ணதாசனிடம் ஆச்சார்யர் விளக்கலானார். மரகதத்தால் பால் எப்படி பச்சை வர்ணம் பெற்றதோ அதைப் போலவே ஸ்ரீமந் நாராயணனை ஏந்திக் கொண்டிருக்கும் பாற்கடலும், அவனது வர்ணத்தைப் பெறுகிறது. அதனாலேயே மேகவர்ணமாய் இருக்கிறது என்று விளக்கினார்.

கண்ணில் நீர்பெருக்கெடுத்த கண்ணதாசன், இந்த நிகழ்விற்குப் பின்தான் “திருப்பாற்கடலில் பள்ளிகொண்டாயே ஸ்ரீமந் நாராயணா” என்ற அற்புதப் பாடலை இயற்றினார்.



உம்மிடியாரிடம் இந்த மரகதத்தை காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்கு மகுடம் செய்து அதில் பதிக்கும்படி கேட்டுக் கொண்டார். தன் மீது சந்தேகம் கொண்டு அவமானப்படுத்தப்பட்டு விட்டதாய் தவறாக நினைத்தமைக்கு மன்னிக்கு மாறு வேண்டிக் கொண்டார் உம்மிடியார்.

கல்லின் தன்மையைச் சோதிக்க அல்ல, அடியார்களின் அறியாமையைப் போக்கவே என்று புரிந்து கொண்டார்.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com

# சிவனை காத்த பாறை

மகாபாரதப் போரில் தங்கள் உறவினர்களையே கொன்றதால் ஏற்பட்ட பாவத்தை போக்கிக்கொள்ள பாண்டவர்கள் காசிக்கு புனித யாத்திரை மேற்கொண்டனர். ஆனால் சிவபெருமான் கயிலாயம் சென்றிருப்பதை அறிந்த பாண்டவர்கள், காசியிலிருந்து கயிலாயம் நோக்கி பிரயாணம் செய்யத் தொடங்கினர். ஹரித்வார் வழியாக இமயத்தை அடைந்தபோது தொலைவில் சிவபெருமானை கண்டனர். ஆனால் சிவபெருமான் அங்கிருந்து மறைந்துவிட்டார். அந்த இடம் தற்போது குப்த காசி என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

சிவபெருமானைத் தரிசிக்காமல் திரும்புவதில்லை என்ற உறுதியுடன் பாண்டவர்கள் குப்த காசியில் இருந்து இமாலயப் பள்ளத்தாக்கில் இருக்கும் கௌரிகுண்ட் என்னும் இடத்தை அடைந்தனர். அங்கு அவர்கள் சிவபெருமானை தேடிஅலைகையில் நகுலனும் சகாதேவனும் ஒரு வித்தியாசமான காட்டெருமையைக் கண்டனர்.

பீமன் தனது கதாயுதத்தைக் கொண்டு அக்காட்டெருமையைத் தாக்க முயன்றான். ஆனால் அது சாதுரியமாகப் பீமனின் பிடியில் இருந்து தப்பிவிட்டது. ஆனால் பீமனின் கதாயுதம் அதன் முகத்தில் தாக்கியது. அக்காட்டெருமை தனது முகத்தை நிலத்தில் இருந்த பிளவு ஒன்றில் மறைத்துக் கொண்டது. பீமன் அதன் வாலை பிடித்து இழுக்க முயன்றான். அப்போது நிலத்தில் இருந்த பிளவு நேபாளம் வரை நீண்டது. அவ்விடம் தற்போது நேபாளில் தோலேஷ்வர் மகாதேவ் என்று வழங்கப்படுகிறது. அக் காட்டெருமையின் உடற் பகுதி கேதார்நாத்தில் இருந்தது.

காட்டெருமையின் உடற்பகுதி இருந்த இடத்தில் ஒரு ஜோதிர்லிங்கம் உண்டானது. அதன் ஒளியில் இருந்து சிவபெருமான் பாண்டவர்களுக்குக் காட்சியளித்து அவர்களின் பாவத்தைப் போக்கினார். அந்த முக்கோண வடிவ ஜோதிர்லிங்கம் கேதார்நாத் கோயிலின் கருவறையில் உள்ளது. இக்கோவில் வருடம் முழுவதும் செல்ல முடியாது, வருடத்தில் 6 மாதங் கள் மட்டுமே திறக்கப்படும்.

மற்ற 6 மாதங்கள் இயற்கை இக்கோவிலை வழிபடுவதாக கூறப்படுகிறது.

மனிதர்கள் கோவில்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ அந்த அளவு இயற்கையும் சிவபெருமானை வழிபட்டு சிவன் அருள் பெறுகிறது என்பது உணரக்கூடிய உண்மைச் சம்பவமாகும்.

2013ல் அங்கு மாபெரும் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டு பேரிடர் பேரழிவை உண்டாக்கியது!

கடுமையான வெள்ளப்பெருக்கில் கேதர்நாத் கோவிலும் அடித்துச் செல்லப்படும் நிலைஏற்பட்டது! மலைப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டு மண்ணும் கல்லும் மழைப் போல கீழே கொட்டியது!

ஆனாலும் இயற்கையாக படத்தில் காட்டப்பட்டுள்ள ஒரு மிகப்பெரிய பாறை அசுர வேகத்தில் உருண்டு வந்து கோவிலின் பின்புறம் நின்றுக்கொண்டு கடும் வெள்ளத்திலிருந்து கோவிலை காப்பதுபோன்று அரணாக இருந்து சிவனை காத்துள்ளது.

இன்றும் இக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் சிவனை வணங்குவதுடன், சிவனை காத்த இந்த மிகப்பெரிய பாறையையும் வணங்கிவிட்டு செல்கின்றனர்.







# விநாயகரை குளிர்விக்கும் அருகம் புல்



அனலாசுரன் என்பவன் யமனுடைய மகன். வேண்டாத சேர்க்கையினால் தீயவனாகி சாபம் பெற்றான். இதனால் மூர்க்கனாக மாறி தேவர்களை இம்சித்து வந்தான். வரங்கள் பல பெற்றதாலும், பிறப்பிலேயே அவனது உடல் பெரும் அனலைக் கக்கியதாதால் அவனுக்கு அருகில் கூட யாரும் செல்ல முடியவில்லை.

செல்பவர்களை எல்லாம் சாம்பலாக்கினான் அனலாசுரன். என்ன செய்வது என்று புரியாத தேவர்கள் பிள்ளையாரை வேண்டி அவரது உதவியை நாடினர். கணநாதரும் அவனை ஒழித்து தேவர்களை காக்க அவனிருக்கும் இடம் சென்றார். அங்கு கணபதியின் கணங்கள் எல்லாம் வெம்மை தாங்காமல் ஓலமிட்டன. இதனால் கணபதியின் கோபம் எல்லை கடந்தது.

அனலாசுரனை பெரும் அனல் வடிவம் கொண்டு கணபதி தாக்கினார். அந்த அசுரன் ஓய்ந்துபோன தருணத்தில் அவனைப் பிடித்து விழுங்கி விட்டார் கணபதி.

காரணம் அவனது பூத உடல் கூட பெரும் வெப்பம் கொடுத்தது உயிர்களை வாட்டும் என்பதுதான். அனலோடு அவன் விழுங்கப்பட்டதால், கணபதியின் வயிறு எரிந்து கொண்டிருந்தது.

உஷ்ணம் தாங்காத கணநாதர் சக்தியை எண்ணி வணங்கினார்.



தேவர்கள் யாவரும் கணநாதரை குளிர்விக்கும் வகையில் என்ன என்னவோ செய்துபார்த்தார்கள். கங்கை நீரை ஊற்றினார்கள். பனிப்பாறையைப் பெயர்த்தெடுத்து கணபதியின் தலையில் வைத்தார்கள். எதிலுமே தீ தணியவில்லை.

இதனிடையே, சப்த ரிஷிகள் எனப்படும் அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கவுதமர், காஸ்யபர், ஆங்கிரஸர் ஆகிய எழுவரும் சேர்ந்து ஒரு சாண் அளவுள்ள இருபத்தொரு அருகம்புற்களைக் கொண்டு வந்து கணபதியின் தலையில் வைத்தனர்.

இதனால் கணபதியின் உடல் குளிர்ந்து, வயிற்றில் இருந்த அனல் தணிந்தது. இதனால் விநாயகர் மகிழ்ந்தார். தனக்கான பூஜைப் பொருள் அருகம்புல்லே என்று மனம் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டார். 'இனி தன்னை பூஜிக்க இருப்பவர், வரத்தைப் பெற விரும்புவோர் அனைவரும் அருகம்புல் கொண்டு வணங்கினால் மகிழ்வேன்' என்று வரமளித்தார் பிள்ளையார்.

அன்று முதல் கணபதியின் பூஜைக்கு உரியதானது அருகம்புல். தூர்வை, மேகாரி, பதம், மூதண்டம் என பல பெயர்களால் சிறப்பிக்கப்படும் அருகம்புல் கணநாதருக்கு மட்டும் அல்ல, மூலிகையாக எடுத்துக்கொண்டால் நமக்கும் நலம் பயப்பவை தான்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


www.aanmeegamalar.com

# புதிய துவக்கம்

aanmeegamalar YouTube channel

## ஆன்மிக சேவையில் எங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்புகிறீர்களா?

தொடர்பு கொள்ளவும் 8825844033

உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்